REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN 92 ANNIVERSARY

2024 ஏப்ரல் 22 திங்கட்கிழமை

வரு. 92 இல. 95 | Monday 22, April, 2024 | 16 பக்கங்கள் | 50/-

## தென் மாகாண ஆளுநர் விலி கமகே இராஜினாமா

லோரன்ஸ் செல்வநாயகம்

தென்மாகாண ஆளுநர் பதவியிலிருந்து விலி கமகே இராஜினாமா செய்துள்ளார்.

அவரது வெற்றிடத்திற்கு தற்போது வடமேல் மாகாண ஆளுநராக பதவி வகிக்கும் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நியமிக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

06



## குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு ஏப்ரல், மே மாதங்களில் பத்து கிலோ அரிசி

### சுமார் 27 இலட்சம் குடும்பங்கள் தகுதி

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஏப்ரல், மே மாதங்களில் மாதாந்தம் 10 கிலோ அரிசி வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஊவா பரணகம, அம்பகஸ்டோவ மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் தேசிய நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி:

பொருளாதாரத்தையும் மக்களையும் வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தில், எவரையும் அரசாங்கம் கைவிடப்போவதில்லை. வளர்ச்சியடைந்து வரும் பொருளாதார நன்மைகள் அனைவரையும் சென்றடைய வேண்டும்.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ், முழு நாட்டையும் உள்ளடக்கிய குறைந்த வருமானம் பெறும் 27 இலட்சத்து 40 ஆயிரம் குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு மாதாந்தம் பத்து கிலோ அரிசி வழங்கப்படும்.

பதுளை மாவட்டத்தின் பதினைந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள ஒரு இலட்சத்து 91 ஆயிரத்து 548 குடும்பங்கள் அரிசி 06

## சு.க.வின் பதில் தலைவராக விஜயதாச; மைத்திரி தரப்பினர் ஏகமனதாக தீர்மானம்

### சந்திரிக்கா தரப்பில் நிமல் சிறிபால டி சில்வா

லோரன்ஸ் செல்வநாயகம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தரப்பினரால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால 06



## தியத்தலாவ கார் பந்தய திடலில் கோர விபத்து



### ஏழு பேர் பலி: 21 பேருக்கு காயம்

- ஓட்டப் பாதையை விட்டு விலகிய கார்
- பார்வையாளர்களில் மோதியதில் பாரிய அனர்த்தம்
- பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவிப்பு

காயமடைந்தவர்களில் ஐவரின் நிலைமை கவலைக்கிடம்

லோரன்ஸ் செல்வநாயகம்

தியத்தலாவ பகுதியில் நேற்று கார் ஓட்டப் பந்தயத்தின்போது இடம் பெற்ற கோர விபத்தில், ஏழு பேர் பலியாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

வசந்த காலத்தையொட்டி தியத்தலாவ பகுதியில் நேற்று நடைபெற்ற கார் ஓட்டப் பந்தயத்தின் போதே இவ்விபத்து இடம்பெற்றது. இதிலேயே ஏழு 06

## கடன் ஸ்திரநிலையை ஏற்படுத்த பாரிஸ் கிளப் தொடர்ந்து ஒத்துழைப்பு

நாட்டில் கடன் ஸ்திரநிலையை ஏற்படுத்த தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதாக பாரிஸ் கிளப் (Paris Club) மீண்டும் தெரிவித்துள்ளது. நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் Paris Club இணைத் தலைவர் வில்லியம் ரூஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பிலேயே, இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவுடனும், ஏனைய தரப்பினருடனும் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் தொடர்பில் இச்சந்திப்பில் கருத்துகள் பரிமாறப்பட்டன. இதனிடையே, OPEC நிதியத்தின் தலைவர் அப்துல் ஹமீட் 06

## பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள்; உலக வங்கி அதிகாரிகளுடன் பேச்சு

### தனியார் துறையினரின் கூட்டிணைவில் நீர் வழங்கல் திட்டங்கள்; அமைச்சர் ஜீவன்



பெருந்தோட்ட மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள், சவால்களை கையாள்வதற்கான நடவடிக்கைகள் குறித்து உலக வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக 06

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னாலுள்ள உண்மைகள் உடன் கண்டறியப்பட வேண்டும்

### கொச்சிக்கடை நினைவேந்தல் நிகழ்வில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை

லோரன்ஸ் செல்வநாயகம்

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மைகளை கண்டறியும் வகையில், சுதந்திரமானதும் நியாயமானதுமான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். நீதியை மறைத்து 06



## போலி இணையங்கள் நீக்கம்

தபால் திணைக்களத்தின் இணையத்தளத்தைப் போன்று வடிவமைக்கப்பட்ட ஐந்து போலி இணையத்தளங்கள், இணையத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு CERT தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனோபொல: இந்த இணையத்தளங்கள் தொடர்பில் சுமார் முப்பத்தைந்து பண மோசடி சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவித்தார்.

## உமாஓய வேலைத்திட்டம் கையளிக்கும் ஏற்பாடுகள் பூர்த்தி

உமா ஓய பல்நோக்கு அபிவிருத்தி வேலைத் திட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன, வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இவ்வேலைத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. உமா ஓய பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் தொடர்பில் அமைச்சர் 06



## சீன துணை அமைச்சர் கொழும்பு வருகிறார்



சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச பிரிவின் துணை அமைச்சர் சன் ஹையன், இரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வரவுள்ளார். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இவர் 06

## நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதியின் கரத்தை சகலரும் பலப்படுத்துவது அவசியம்

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்திற்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டுமென, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார். மதம், இனங்களை ஒன்றிணைத்த விரிவான கூட்டணி தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சுற்றியே காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 06

### ஆட்பதிவு திணைக்களத்தின்

## மத்திய மாகாண அலுவலகம் நுவரெலியாவில் இன்று திறப்பு

ஆட்பதிவு திணைக்களத்தின் மத்திய மாகாண அலுவலகம் இன்று (22) நுவரெலியாவில் திறக்கப்படவுள்ளதாக, ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் ஜீ.பிரதீப் சப்புதந்திரி தெரிவித்தார்.



இதுவரைகாலமும் ஆட்பதிவு திணைக்களத்தின் மத்திய மாகாண அலுவலகம் கண்டியில் சிறிய அலுவலகமாக இயங்கி வந்தது. இந்த அலுவலகம் நுவரெலியா நகரில் இலக்கம் 95/26 A, லேடி மெகலம் வீதி, 06



03 நாடு முழுவதும் 40,000 ஆசிரியர் வெற்றிடங்கள்

## லொறி, முச்சக்கரவண்டி விபத்து: ஒரே குடும்பத்தில் மூவர் உயிரிழப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

எல்பிட்டிய பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர், பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எல்பிட்டிய, அவித்தாவ பிரதான வீதியில் நேற்றுக் காலை இவ்விபத்து இடம்பெற்றது. இதில், முச்சக்கரவண்டியைச் செலுத்தி வந்த 68 வயதான நபரும் அவரது பேரன் மற்றும் பேத்தியுமே உயிரிழந்தனர். லொறியும் முச்சக்கரவண்டியும் மோதி இவ் 06

## தமிழ் பொது வேட்பாளர்: நகைச் சுவையான சிந்தனை

### வெல்ல முடியாத விடயத்துக்கு ஏன் முயற்சிக்க வேண்டும்



ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்தும் யோசனை நகைச்சுவைக்குரியது எனத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார், இந்த முயற்சிகளுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்: 06

### ஈரான், இஸ்ரேல் போரால்

## ஸ்ரீலங்கன் விமான பாதைகளில் மாற்றம்

ஈரான், இஸ்ரேலுக்கிடையில் நிலவும் போர் மற்றும் அங்கு நிலவும் பதற்றங்களை கருத்திற்கொண்டு, விமானப்பயணப் பாதைகளை மாற்றுவதற்கு ஸ்ரீலங்கன் விமான சேவை நடவடிக்கை எடுத்து வருகிறது. 06



## பெருந்தோட்ட வீட்டுத் திட்ட நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

### தலா 28 இலட்சம் ரூபாவில் வீடுகள் இரண்டு வருடங்களில் கையளிப்பு

இந்திய நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்படும் 10,000 பெருந்தோட்ட வீட்டுத் திட்டத்தின் நிர்மாணப்பணிகள், ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஆறு மாவட்டங்களில் உள்ள பெருந்தோட்டப் பகுதிகளில் இவ்வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அதன் தலைவர் ரஜீவ் சூரியஆரச்சி தெரிவித்தார். 06

# நகர்வலம்



## வெளிவிவகார அமைச்சின் ஏற்பாட்டில் சிங்கள, தமிழ் புத்தாண்டு நிகழ்வு





சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு வெளிவிவகார அமைச்சும் அதன் உத்தியோகத்தர்களும் இலங்கைக்கான இராஜதந்திர மற்றும் தூதரக ஊழியர்களுக்காக கொழும்பு பொலிஸ் பார்க் மைதானத்தில் சனிக்கிழமை (20) வருடாந்த விளையாட்டு நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் பங்குபற்றிய இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரகம் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட கூடாரத்தை 'சவூதியின் விஷன் 2030' மற்றும் சவூதி அரேபியாவின் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுவரும் மறுமலர்ச்சிகளை பிரதிபலிக்கும் வகையில் அமைத்திருந்ததோடு வெளிவிவகார அமைச்சின் ஊழியர்கள் உட்பட வைபவத்தில் பங்குபற்றியவர்களுக்கு சவுதி தூதரகத்தின் ஏற்பாட்டில் மதிய உணவும் வழங்கப்பட்டது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதியான பரிசுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவ்வைபவத்தில் சவுதி அமைத்திருந்த கூடாரத்திற்கு விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, பிரதித் தூதுவர் அப்துல்லா அர்கூபி உள்ளிட்ட தூதரக அதிகாரிகளுடன் அளவளாவுவதையும் அருகில் சவூதி அரேபியாவிற்கான இலங்கை தூதுவர் ஓ.எல். அமீர் அஜ்வாட் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

## கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு படையினர் தினம்; பலர் பங்கேற்பு

### ஈரான் தூதரகம் ஏற்பாடு





**ருஸைக் பாரூக், அஷ்ரப் ஏ சமத்**

ஈரான் இஸ்லாமிய குடியரசு தூதரகம் ஒழுங்கு செய்த வருடாந்த பாதுகாப்பு படையினர் தினம் (18) கொழும்பு சங்ரில்லா ஹோட்டலில் அனுஷ்டிக்கப்பட்டது. ஈரான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாநிதி அலிசா டெல்கோஸ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அத்துடன் இலங்கையில் உள்ள முப்படைகளின் நிறைவேற்று தரத்தில் உள்ள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

ஈரான் தூதுவர், ஈரான் பாதுகாப்புப் படைகளது முன்னேற்றம் ஈரான் இஸ்லாமிய புரட்சி அதன் பின்னரான காலத்தில் ஈரான் தேசம் முப்படைகள், அணு ஆயுதம் மற்றும் விமான தரைப்படைகள், விஞ்ஞான ஆராய்ச்சிகள் கடற்படைகளின் முன்னேற்றம் பற்றியும் உரையாற்றினார். அத்துடன் பலஸ்தீன் நாட்டின் நடைபெறும் அநியாயங்கள் யுத்தம் பற்றியும் ஈரான் தூதுவர் அங்கு உரையாற்றினார்.

பாதுகாப்புச் செயலாளர் மேஜர் கமல் குணரத்தின் அங்கு உரையாற்றுகையில்

இலங்கை ஈரான் பாதுகாப்பு மற்றும் நட்புறவுகள். கடல்பிராந்தியத்தில் இலங்கை ஈரான் பாதுகாப்பு மற்றும் ஈரான் நாடு பாதுகாப்புத்துறையில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் தொடர்பிலும் அந்த நாடு அடைந்து வரும் முன்னேற்றங்கள் இலங்கை ஈரான் நட்புறவு பற்றியும் பாதுகாப்புச் செயலாளர் அங்கு உரையாற்றினார். அத்துடன ஈரான் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு ஞாபகார்த்த கேக்கும் இங்கு அதிதிகளினால் வெட்டப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கையில் உள்ள அல் முஸ்தபா பல்கலைக்கழக கத்தின் பணிப்பாளர்கள், ரஷ்யா, சீனா, பங்களாதேஷ், பாகிஸ்தான் மலேசியா நாடுகளின் தூதுவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## சத்ய சாயி பகவானின் மகா சமாதி தின நிகழ்வு



கொழும்பு, ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் மற்றும் சத்ய சாயி பாபா அறக்கட்டளையகத்தின் ஆதரவில் சத்ய சாயி பகவானின் மகா சமாதி தின ஆராதனா மகோற்சவம் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை, கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் அதிகாலை 5.00 மணிக்கு பூஜை, ஆராத்தியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

விஷேட நிகழ்வாக, புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் வைத்து பூஜித்து எடுத்துவரப்பட்ட பாபாவின் ஐம்பொன் திருவுருவச் சிலைக்கு நவாபிஷேகம், மகா ருத்ர யாகபூஜை என்பனவும் நடைபெறும். நண்பகல் மங்கள ஆராத்தியை தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

## சீனன்கோட்டை பிரதேசத்தில் காஸா நிதி சேகரிப்பு திட்டம் முன்னெடுப்பு

### சீனன்கோட்டை பிரதேச சிறார்களும் களத்தில்





பலஸ்தீன காஸா சிறார்களுக்கான நிதி சேகரிக்கின்ற இலங்கை அரசாங்கத்தின் திட்டத்திற்கு பேருவளை சீனன்கோட்டை மக்களினது பூரண பங்களிப்பினை பெற்றுக் கொடுக்க சீனன்கோட்டை பள்ளிச் சங்கம் முடிவு செய்துள்ளது.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர் சங்கத்துடன் இணைந்து பாரிய நிதித் தொகையை சேகரித்து வழங்குவதற்கு உத்தேசித்துள்ளதுடன் நிதி சேகரிப்பதற்காக ஆறு பேர் கொண்ட குழுவொன்றையும் பள்ளிச் சங்கம் நியமித்துள்ளது.

பள்ளிச் சங்க தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியாரின் வழிகாட்டலின் கீழ் நிதி சேகரிப்பதற்காக யுஸ்ரி உவைஸ், பஸ்லி மர்ஸூக், மிஷ்கர் முனவ்வர், அஸ்ஜத் பவ்ஸ், அஷ்கர் அலி முபாரக், சிராஸ் ஹனபி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சீனன் கோட்டை பெரேரா வீதி மற்றும் நவ்பல் ஜாபிர் மாவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளம் சிறார்கள் குழுவொன்று (20) காலை முதல் பிற்பகல் வரை பிரதேசத்தில் உள்ள வீடுகளுக்கு சென்று காஸா சிறார்களுக்காக நிதி சேகரிப்பில் 2,05,000 ரூபாவை சேகரித்தனர். புனித ரமழான் பெருநாள் தினத்தில் தனக்கு அன்பளிப்பாக கிடைத்த நிதியை சிறார்கள் தியாக உணர்வோடு இந்த நிதி சேகரித்த சிறார்களிடம் ஒப்படைத்ததை காணக்கூடியதாக இருந்தது. பிரதேச வாழ் மக்கள் மிக உற்சாகத்தோடு தம்மால் முடிந்த நிதியை ஒப்படைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த சிறுவர் குழுவினரால் சேகரிக்கப்படும் நிதித் தொகை சீனன் கோட்டை பள்ளிச்சங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்த சிறுவர்களின் துணிச்சல் மிகு செயலை அனைவரும் பாராட்டியதோடு பிரதேச சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மிக ஆர்வத்துடன் நிதி உதவி வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தினர்.

சீனன்கோட்டை வாழ் மக்கள் சுனாமி, வெள்ளம், மண்சரிவு, சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களின் போதும் கொரோனா நோய் மற்றும் வன்செயலினால் பாதிக்கப்பட்டோருக்கும் அவ்வப்போது இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளின்றி நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் உதவி செய்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## குளத்திலிருந்து ஆணின் சடலம் மீட்பு

### அறலகங்வில பகுதியில் சம்பவம்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கொலை செய்யப்பட்டு குளத்தில் போடப்பட்டிருந்த ஆண் ஒருவரது சடலத்தினை அறலகங்வில பொலிஸார் (18) மீட்டுள்ளனர்.

அறலகங்வில பிம்புரத்தேவ குளத்தில் சடலமொன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சம்பவயிடத்திற்குச் சென்ற பொலிஸார் பிரதேச வாசிகளின் உதவியுடன் சடலத்தினை மீட்டுள்ளனர். சடலமாக மீட்கப்பட்டவர் 41 வயதுடைய முல்கல யாய 01 பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, உயிரிழந்த நபரும் இன்னுமொரு நபரும் பெண் ஒருவரும் சம்பவதினம் குளத்திற்கு அருகில் மது அருந்தியுள்ள போது பழைய குரோதம் தொடர்பில் அவர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் இக்கொலை இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## அநுராதபுரம் மாவட்டத்தில் 04 பேர் 'SLEAS' பரீட்சையில் சித்தி

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

அண்மையில் வெளியான கல்வி நிருவாக சேவை (SLEAS 3) போட்டிப் பரீட்சையில் இம்முறை அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து நான்கு பேர் முதன் முறையாக சித்தியடைந்துள்ளனர். இதில் நேகமையிலிருந்து இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

அநு./ முஸ்லிம் அட்டவீரவெவ முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் வை. சியாட் ( சட்டத்தரணி) ஆங்கில பாடநெறிக்கும் அநு./ கட்டியாவ அஸாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆர்.எப். நிஹாஸா ஆசிரியை தமிழ் பாடநெறிக்குமாக இருவரும் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் இவர்களுக்கு பிரதேச மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

## தங்க ஆபரண கடையில் 'நெக்லஸ்' கொள்ளை

### பட்டப்பகலில் தப்பிச்சென்ற கொள்ளையர்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மார்க்கட் பகுதியில் அமைந்துள்ள தங்க ஆபரண கடையொன்றில் 'நெக்லஸ்' ஒன்றை கொள்ளையடித்து தப்பிச் சென்ற சந்தேக நபரை கைது செய்வதற்கு அநுராதபுரம் தலைமையக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தங்க நெக்லஸ் வாங்கவிருப்பதாகவும் சில தங்க நெக்லஸ்களை சரி பார்க்க வேண்டும் என கூறி நெக்லஸ்களை பார்வையிட்டுக் கொண்டிருந்த நபர், திடீரென அதிலொரு நெக்லஸை கொள்ளையடித்து வெளியில் தப்பிச் சென்றுள்ளார். தங்க ஆபரண நிலைய உரிமையாளரினால் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டிற்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ள நெக்லசின் பெறுமதி 240,000 ரூபா எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்க நெக்லஸ் ஒன்றை கொள்வணவு செய்வதற்காக வியாபார நிலையத்திற்குள் சென்ற சந்தேக நபர் பல நெக்லஸ்களை பார்வையிட்டுக் கொண்டிருந்த நிலையில் அதில் ஒரு நெக்லஸை அபகரித்து கொண்டு வெளியில் தப்பிச் சென்றுள்ளார். இந்நிலையில் இவரை பின்தொடர்ந்து துரத்திச் சென்ற ஆபரண நிலைய உரிமையாளரின் புதல்வர் மடக்கி பிடித்த போது சந்தேக நபர் அவரின் காற்சட்டை பையிலிருந்த ஒரு வகை வெள்ளை தூளை முகத்தில் அடித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆபரண நிலையத்தில் உரிமையாளர், அவரின் புதல்வர் மற்றும் சேவையாளர் ஒருவரும் இருந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வதற்கு பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்

## பாணந்துறை நகர்ப்புற கடற்கரை பிரதேசம் சுத்தம் செய்யும் பணி





**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

பாணந்துறை பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையின் ஏற்பாட்டில் நகர்ப்புற கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்யும் சிரமதானப் பணி சனிக்கிழமை (20) பாணந்துறையில் இடம்பெற்றது.

பாணந்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமில் ரத்நாயக தலைமையில் இடம்பெற்ற இந்த சிரமதானப் பணியில் பொலிஸார், தொண்டர் அமைப்புகள் உள்ளிட்ட சுற்றாடல் பாதுகாப்பு ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். அழகான சுற்றாடலைக் கொண்ட இந்த கடற்கரையை பாதுகாப்பது அனைவரினதும் கடமையாகும்.

நாம் பாவிக்கும் பொருட்களின் கழிவுகளால் கடற்கரை மாசடைந்து சுற்றாடல் அசுத்தமடைவது தவிர்க்கப்படல் வேண்டும். இந்த வேலைத் திட்டத்தை மாதம்தோறும் முன்னெடுக்க தாம் எதிர்பார்ப்பதாகவும் நிகழ்வில் உரையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

## தென் மாகாணத்திலும் கடும் வறட்சி, உஷ்ணம்

**வெலிகம தினகரன் நிருபர்**

நாட்டின் பல மாகாணங்களிலும் நிலவி வரும் கடும் வறட்சி மற்றும் அதி உயர்ந்த வெப்பநிலை கால நிலையினால் தென் மாகாணமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வெப்ப நிலையை ஓரளவாவது தாங்கிக் கொள்ள அதிகளவு நீர் அருந்துவது சிறந்ததென மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக சிறுவர்களுக்கும் அடிக்கடி நீர் அருந்தக் கொடுக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

வெயில் நேரங்களில் வெளியிலே சுற்றித்திரிவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஏப்ரல் 22 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
சுபஹ் - 04.44
லுஹர் - 12.11
அஸர் - 03.21
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் சித்திரை 09
ராகுகாலம் : காலை : 07.31 - 9.01வரை
சுபநேரம் : பகல் : 12.01 - 01.31வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# தாக்குதல் சூத்திரதாரிகளை மடியில் வைத்துள்ள ஜே.வி.பி விசாரணை நடத்தக் கோருவது வேடிக்கை



ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமானவர்களின் பெயர்கள்,ஜே,வி,பியின் தேசிய பட்டியலில் உள்ள நிலையில்,தாக்குதலுக்கு காரணமானவர்களை விசாரிக்க வேண்டுமென ஜே.வி.பி கூறுவது கேலிக்கூத்தானதென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஜே.வி.பி. இவ்வாறான வாக்குறுதிகளை வழங்கியது நல்லது. ஏனெனில் அவர்களின் தேசியப் பட்டியலில் இருந்த இப்ராஹிமின் மூன்று மகன்களும் ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தனர். இதற்கு குழுக்களை நியமித்து விசாரணை நடத்தி நேரத்தை வீணடிப்பதில் அர்த்தமில்லை. இப்ராஹீம் இன்னும் உயிருடன் இருக்கிறார், அவருடைய மகன்கள் ஏன் இப்படிச் செய்தார்கள் என்று அவரிடம் கேட்க வேண்டும். அதை அவர் நாட்டிற்கு சொன்னால் எல்லாம் முடிந்து விடும். ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமானவர்களை தங்களது கட்சியின் தேசிய பட்டியலில் வைத்துக் கொண்டு, விசாரணை நடத்துமாறு கூறும் ஜே.வி.பி.யை விட கேலிக்கூத்து இந்த நாட்டில் வேறு எதுவும் இல்லை என்றும் அமைச்சர் கூறினார்.களனியில் நேற்று (21) இடம்பெற்ற குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

தேர்தல் நெருங்குகிறது என்பதாலா அரிசி விநியோகம் செய்கிறீர்கள் என்ற கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர்,

அண்மைக்காலத்தில் நாட்டில்அரிசியின் விலை அதிகளவில் காணப்பட்டது. அதனால் அரிசி விலையை கட்டுப்படுத்த ஆளுநர்கள் ஊடாக அரசாங்கம் அரிசியை கொள்வனவு செய்தது. விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். கொவிட் மற்றும் போராட்டம் காரணமாக, புத்தாண்டு மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட முடியாமல் போனது. ஆனால் தற்போது பொருளாதாரம் ஓரளவுக்கு நிலையாக உள்ளது. மக்களின் தியாகத்தாலே இது நடந்தது.

குறைந்த வருமானம் பெறுபவர்கள் அதிக தியாகங்களைச் செய்தனர். நலன்புரிப் பணிகளைச் செய்ய வேண்டாம் என்று சர்வதேச அமைப்புகள் கூறினாலும் ஜனாதிபதி நலன்புரிப் பணிகளைச் செய்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# நாடு முழுவதும் 40,000 ஆசிரியர் வெற்றிடங்கள்



நாட்டில் உள்ள பாடசாலைகளில் மொத்தமாக 40,000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், மேல், கிழக்கு, வடமத்தி , தென் மற்றும் ஊவா மாகாண பாடசாலைகளிலே ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவித்தார்.

இதன்படி, மேல் மாகாணத்தில் ஏறக்குறைய 7,000 ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது. கிழக்கு மாகாணத்தில் கிட்டத்தட்ட 3,800 வெற்றிடங்களும், வடமத்திய மாகாணத்தில் 3,698 வெற்றிடங்களும், பதிவாகியுள்ளன. தென் மாகாணத்தில் 3,100 ஆசிரியர் வெற்றிடங்களும் பதிவாகியுள்ளன. மத்திய மாகாணத்தில் 6,200 ஆசிரியர் வெற்றிடங்கள் பதிவாகியுள்ளன.

தற்போதுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பாவிடின், இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டவருக்கு இடையூறு ஏற்படுத்தும் சாரதிகளுக்கு நடவடிக்கை

வெளிநாட்டவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வாகன சாரதிகளுக்கு எதிராக, சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சாரதிகளை கைது செய்வதற்காக சிவில் உடையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

வெளிநாட்டவர்களிடமிருந்து பணத்தை சுரண்டும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர்,அதிக சத்தத்துடன் செலுத்தப்படும் முச்சக்கர வண்டிகள் தொடர்பில் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# பெரிய வெங்காயம் அடுத்த மாதம் இறக்குமதி



இரண்டாயிரம் மெட்ரிக் தொன் பெரிய வெங்காயம் அடுத்த மாதம் இறக்குமதி செய்யப்படுமென, சதொச நிறுவனத்தின் தலைவர் திரு.பசந்த யாப்பா அபே வர்தன தெரிவித்தார். இந்தியாவிலிருந்து இதனை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம், நாடளாவிய ரீதியில் உள்ள சதொச கிளை வலையமைப்பு மற்றும் பல்பொருள் அங்காடி வர்த்தக நிலையங்கள் ஊடாக நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் எனவும் அபே வர்தன மேலும் தெரிவித்தார்.

# சுற்றுலா பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்க விசேட வழிகாட்டல்

சுற்றுலாப்பயணிகள், வெளிமாவட்ட நபர்களுக்கு தங்குமிடங்களை வழங்குவோர் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் தங்களை பதிவு செய்ய வேண்டுமென வட மாகாண ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.



வட மாகாண சுற்றுலாத் துறை அபிவிருத்தி தொடர்பில் (18) ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.இக்கூட்டத்தில், வட மாகாணத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக சில பகுதிகளில் மக்கள் தமது வீடுகளில் அறைகள் மற்றும் வீடுகளை வழங்குகின்றனர். இவ்வாறு மாதக்கணக்கில் வீடுகள் மற்றும் அறைகளை வழங்குவோர் தங்களது விபரங்களை பதிவு செய்வது அவசியம்.

இவ்வாறானவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கி, அவர்களது வருமானத்தை அதிகரிக்கும் வகையில் ஊக்குவிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் வட மாகாண ஆளுநர் இதன்போது கூறினார்.

பதிவு செய்யாது தங்குமிட வசதிகளை வழங்குவோர் தொடர்பில் தகவல்களை திரட்டி, அவர்களின் சேவைகளை ஒழுங்குப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் கூறினார். சட்ட பொறிமுறைக்குள் இவர்கள் உள்வாங்கப்படும் போது, அவர்களின் தங்குமிட வசதிகள் தொடர்பில் இணையத் தளங்களில் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவர்களின் வருமானத்தை அதிகரிக்க முடியும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.


சர்வதேச தரத்திலான பாதுகாப்பான அடையாள அட்டை





நாட்டின் பெரும்பான்மையான மக்கள் வசிக்கும் மத்திய மற்றும் ஊவா மாகாண மக்களின் நலன் கருதி ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் மத்திய மாகாண அலுவலகம்
நுவரெலியாவில்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்
கௌரவ ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க
அவர்களின் வழிகாட்டலின் கீழ்

2024 ஏப்ரல் 22
மு.ப.11.00 மணிக்கு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்
கௌரவ டிரான் அலஸ் அவர்களினால்

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் மத்திய மாகாண அலுவலகம் பொதுமக்களின் பாவனைக்காக இன்று திறந்து வைக்கப்படுகிறது.

இல 95/26/A, லேடி மெக்கலம் வீதி,
நுவரெலியா.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
Ministry of Public Security
සුහුරුපාය, பத்தரமுல்லை. Suhurupaya, Battaramulla.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 09ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 13

### குறள் தரும் சிந்தனை



பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு

நற்பண்பு பெற்றவனைக் கணவனாகப் பெற்றால், பெண்டிர்க்கு இல்வாழ்க்கையெனும் புதிய உலகம் பெருஞ் சிறப்பாக அமையும்.

## பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கையை புறக்கணிக்கலாகாது!

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கையின் அடிப்படையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று இந்த சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து மலையகப் பெருநதோட்டப் பிரதேசங்களிலும் தொழிலாளர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தி வருகின்றனர். அந்த வகையில் பதுளை, பசறையிலும் நேற்றும் ஆர்ப்பாட்டமொன்றுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையை முதலாளிமார் சம்மேளனம் நியாயமான கண்கொண்டு நோக்கத் தவறியுள்ளதாகவே தெரிகிறது. அதன் விளைவாகவே தொழிலாளர்கள் வீதியில் இறங்கி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

இந்நடவடிக்கைகளின் ஊடாகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை மக்கள்மயப்படுத்தப்பட்டு வருவதோடு, அது தொடர்பிலான விழிப்புணர்வுகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

தொழிலாளர்கள் முன்னெடுக்கும் தொழிற்சங்க நடவடிக்கைகளால் தேயிலை, இறப்பர் உற்பத்திகளில் தாக்கங்கள், பாதிப்புக்கள் ஏற்பட இடமளிக்கப்படக் கூடாது. அது முதலாளிமார் சம்மேளனத்தின் பாரிய பொறுப்பாகும்.

ஏனென்றால் இந்த உற்பத்திகளில் பாதிப்புக்கள் ஏற்படுவது நாட்டின் பொருளாதாரத்திலும் தாக்கங்கள் செலுத்தக்கூடியதாக அமைந்து விடலாம். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் விஷேட கவனம் செலுத்தத் தவறலாகாது.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் என்பவர்கள் இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு அளப்பரிய பங்களிப்பை நல்கும் பிரிவினரில் ஒரு பகுதியினராவார். அவர்கள் இந்நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுக்கக் கூடியவர்களாக உள்ளனர்.

தேயிலை, இறப்பர் தோட்டங்களில் பணிபுரிபவர்கள் என்றாலும் அவர்கள் இந்நாட்டின் பொருளாதாரத்திற்காக அளிக்கும் பங்களிப்பு அளப்பரியதாகும். சுமார் இரண்டு நூற்றாண்டுகளாக இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு இந்த தொழிலாளர் சமூகம் முக்கிய பங்காற்றி வருகின்றது. அவர்களது பங்களிப்பு எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல.

அப்படியிருந்தும் இத்தொழிலாளர்களின் பொருளாதாரத்தில் முன்னேற்றங்களோ உட்கட்டமைப்பு வசதிகளில் மேம்பாடுகளோ குறிப்பிடத்தக்களவில் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

இவர்களது மூதாதையர் இந்நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட போது அவர்கள் தங்க வைக்கப்பட்ட லயன் அறைகளில்தான் நான்கைந்து பரம்பரையினர் கடந்த பின்னரும் அவர்களது சந்ததியினர் தங்கி இருக்கின்றனர். அவர்களில் பெரும்பகுதியினருக்கு இன்னும் சொந்தமாக காணியோ இருப்பிட வசதியோ இல்லாதுள்ளது.

இந்நிலைமைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் அண்மைக் காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இம்மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும். இது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள உண்மையாகும். அப்போதுதான் அவர்களது பொருளாதாரம் மேம்பட வழிவகுக்கும். அதிலும் குறிப்பாக கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் இந்நாடு கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. அதிலிருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்று மறுமலர்ச்சி பாதையில் தற்போது பிரவேசித்து இருக்கிறது. பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக மக்கள் பல்வேறுவிதமான நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம்கொடுத்தனர். குறிப்பாக அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களது விலைகளும் பெரிதும் அதிகரித்தன. அச்சமயம் நாட்டின் பெரும்பாலான மக்கள் பொறுமை காத்தார்கள். ஆனால் அண்மைக் காலமாகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களுக்கு அமைய அதன் பிரதிபலன்கள் சம்பள உயர்வுகளாகவும், பொருட்களின் விலைக் குறைப்புக்களாகவும் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில்தான் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் 1700 ரூபா சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றனர். தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப இது நியாயமான கோரிக்கை என்பதுதான் பரவலான கருத்தாகும்.

இந்த நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் விஷேட கவனம் செலுத்தியுள்ளதோடு, முதலாளிமார் சம்மேளனத்திற்கு ஆலோசனைகளையும் வழங்கி உள்ளார்.

ஆகவே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையை முதலாளிமார் சம்மேளனமும் நியாயமான கண்கொண்டு நோக்க வேண்டும். அதுவே பெருந்தோட்ட தொழிலாளர்களதும் ஏனைய அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. அப்போதுதான்பெருந்தோட்டத்தொழிலாளர்களின்வாழ்வாதாரத்திற்கு பாரியதொரு நிவாரணம் கிடைக்கப் பெற்றதாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# அம்பேவெல பால் பண்ணைக்கு ஜனாதிபதி கண்காணிப்பு விஜயம்



உலகின் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அம்பேவெல பால்பண்ணை குழுமத்தின் அபிவிருத்தி தொடர்பில் அறிந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (20) முற்பகல் அங்கு விஜயம் செய்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022 டிசம்பர் மாதத்தில் அம்பேவெல பால்பண்ணைக்கு அவசர கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்ததுடன், அதன்போது வழங்கப்பட்ட பணிப்புரைகளின்படி, கடந்த ஆண்டு பண்ணையில் விரிவான அபிவிருத்திப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் முற்பகல் அம்பேவெல பால் பண்ணைக்கு வருகை தந்த ஜனாதிபதியை, பால் பண்ணை குழுமத்தின் பொதுமுகாமையாளர் சரத் பண்டார மற்றும் அதன் பணியாளர்கள் வரவேற்றனர்.

பண்ணையின் புதிய அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்த ஜனாதிபதி, கறவை மாடுகள் வைக்கப்பட்டுள்ள வளாகத்தையும் பார்வையிட்டார்.

அதன் பின்னர், ஊழியர்களுடன் சிறு உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அம்பேவெல பண்ணையின் பால் உற்பத்தித் துறையில் எட்டப்பட்டுள்ள படிப்படியான வளர்ச்சி மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கான அதன் பங்களிப்பையும் பாராட்டினார்.

அதேபோன்று, பண்ணைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அந்த அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த விசேட அதிதிகள் புத்தகத்தில் ஜனாதிபதி குறிப்பு ஒன்றையும் எழுதியதோடு, பண்ணை ஊழியர்களுடன் குழுப்புகைப்படமொன்றையும் எடுத்துக்கொண்டார். மேலும், வார இறுதி நாட்களில் பண்ணையை பார்வையிட வந்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் சந்தித்ததுடன், அவர்களின் விபரங்களை கேட்டறிந்து சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

1940 காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அம்பேவெல பண்ணை, 2001 ஆம் ஆண்டு தனியார் மயமாக்கப்பட்டதுடன், அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விரிவான நவீனமயமாக்கல் காரணமாக, அது தற்போது இலங்கை மற்றும் தெற்காசியாவில் பால் உற்பத்தி மற்றும் பண்ணை தொழில்நுட்பத்தின் அதியுயர் தொழில்நுட்ப பாவனையுடன் கூடிய பிரதான மையமாக மாறியுள்ளதாக அம்பேவெல பண்ணை குழுமத்தின் பொதுமுகாமையாளர் சரத் பண்டார குறிப்பிட்டார்.

## பண்ணையை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை விரிவாக்க பணிப்புரை



ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்திலிருந்து இந்தப் பண்ணையின் அபிவிருத்திக்கு வழங்கிய ஆதரவைப் பாராட்டிய அவர், தொடர்ந்தும் பண்ணையின் செயற்பாடுகளைப் பார்வையிட வருகை தருவதையிட்டு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார்.

2022 டிசம்பர் மாதத்தில் அப்பண்ணைக்கு ஜனாதிபதி சென்றபோது, அதன் தினசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு சுமார் 40,000 லிட்டராக இருந்ததுடன், பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் காரணமாக இவ்வருடம் நாளாந்தம் 52,000 லீற்றர் பால் உற்பத்தி செய்யப்படுவதாகவும் இது 30% அதிகரிப்பாகும் எனவும் சரத் பண்டார மேலும் தெரிவித்தார்.

பால் உற்பத்தித் திறனை படிப்படியாக அதிகரித்து ஆண்டுக்கு 20 மில்லியன் லிட்டர் பால் உற்பத்தி செய்வதற்கு பண்ணை குழு செயல்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கறவை மாடுகளில் உயர்தர வகைகளை இந்நாட்டிலேயே உருவாக்க அம்பேவெல குழுமம் தற்போது செயற்பட்டுள்ளதுடன், அந்த கறவை மாடுகளை பராமரித்தல், தேவையான உணவு நீராகாரம் வழங்குதல், எடையிடுதல், நோய் நிலைகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றை கண்டறியும்போதே மாடுகளை பிரித்துவிடுதல் போன்ற அனைத்து செயற்பாடுகளும் தானியங்கி முறையில் இயந்திரங்கள் மூலம் நடைபெறுகின்றன.

கடந்த விஜயத்தின்போது ஜனாதிபதி வழங்கிய பணிப்புரையின் பிரகாரம் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுப் பணிகள் மற்றும் அனுபவத்திற்காக இந்தப் பண்ணை திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், மாதிரி பண்ணையாக மற்றுமொரு பண்ணை பொதுமக்களுக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் உட்பட எவரும் அங்கு வருகை தந்து மாதிரிப் பண்ணை அனுபவத்தைப் பெற முடியும் எனவும் சரத் பண்டார தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான பொருளாதார வேலைத்திட்டத்துடன், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதுள்ளதாகவும், அம்பேவெல பால்பண்ணைக்கு நாளாந்தம் அதிகளவான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாகவும் சுட்டிக்காட்டிய சரத் பண்டார, பல வருடங்களின் பின்னர் ஒரே நாளில் அதிகளவான 9,000 சுற்றுலாப் பயணிகளின் வருகை இவ்வருடம் ஒரே நாளில் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பண்ணைக்கு வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக இவ்வருடம் விசேட நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர்களின் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சரத் பண்டார மேலும் தெரிவித்தார்.



ஜனாதிபதி ஊடகப் பிரிவு...

# இலங்கை தமிழ்ப் பத்திரிகைத்துறையில் ஆளுமை மிகுந்தவர் அமரர் சிவநாயகம்

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் மிகுந்த ஆளுமை மிக்கவராக விளங்கிய அமரர் எஸ்.டி.சிவநாயகத்தின் 24 ஆவது சிரார்த்த தினம் இன்று (22.04.2024) அனுஷ்டிக்கப்படுகிறது.

02.07.2021இல் திருகோணமலையில் பிறந்தவர் சிவநாயகம். அவரது துணைவியாரான மங்களவதி மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டவர்.

சிவநாயகம் 1946 ஆம் ஆண்டில் கூட்டுறவு சமாஜம் வெளியிட்ட 'ஐக்கிய தீபம்' எனும் சிற்றிதழின் (சஞ்சிகை) கிழக்கு மாகாண ஆசிரியராக தனது 25ஆவது வயதில் எழுத்துலகில் கால்பதித்தார். 1947 ஆம் ஆண்டில் இவர் 'உதயம்' எனும் சிற்றிதழை ஆரம்பித்து, அதன் ஆசிரியராக திகழ்ந்தார். 1948 ஆம் ஆண்டில் தினகரன் நாளிதழ் உதவி ஆசிரியராக இணைந்தார்.

அதன் பின்னர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் அழைப்புக்கிணங்க, 1950 ஆம் ஆண்டின் முற்பகுதியில் 'சுதந்திரன்' வார இதழின் நிர்வாக ஆசிரியர் பொறுப்பை ஏற்று, அதனை திறம்பட நடத்தினார். 1960ஆம் ஆண்டில் வீரகேசரி நாளிதழின் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. 1965 ஆம் ஆண்டு வரை சுமார் 5 ஆண்டுகள் அவர் வீரகேசரியில் பணியாற்றியிருந்தார்.

அதன் பிறகு சுயாதீன பத்திரிகை சமாஜத்தில் இணைந்து, 'தினபதி' எனும் நாளிதழையும் 'சிந்தாமணி' எனும் வாரஇதழையும் புதிதாக உருவாக்கி அவற்றின் பிரதம இதழாசிரியராக இறுதிவரை (1966_1990) அதாவது அந்த ஸ்தாபனம் மூடப்பட்டகாலம் வரை பணியாற்றினார். தினபதி மற்றும் சிந்தாமணி பத்திரிகைகளை வெற்றிகரமாக நடத்தியமைக்காக சிவநாயகத்தை அப்பத்திரிகை நிறுவனம் பணிப்பாளர்களில் ஒருவராக நியமித்தது.



## இன்று 24 ஆவது சிரார்த்ததினம்

அவ்வாறே, சிவநாயகத்தின் பிறந்ததின நூற்றாண்டை (1921_ 2021) முன்னிட்டு, இலங்கை அரசு நினைவு முத்திரை வெளியிட்டு அன்னாரை தேசிய ரீதியில் கௌரவப்படுத்தியது. இலங்கை பத்திரிகைத்துறை வரலாற்றில், தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர் ஒருவருக்கு தேசிய ரீதியில் கிடைக்கப் பெற்ற மிக உயர்ந்த கௌரவம் இது எனலாம்.

சிந்தாமணி பத்திரிகை மூலம் தமிழ் இலக்கியத்துறைக்கும், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் ஆசிரியர் சிவநாயகம் ஆற்றிய சேவைகள் அளப்பரியவை. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் இலங்கைக்கு (கணினி மூலம்) அறிமுகமாவதற்கு முன்னரே, அதனை சிந்தாமணி இதழின் ஆசிரியர் தலையங்கத்தின் ஊடாக முதல் முதலில் அறிமுகப்படுத்தி, இலங்கை வாசகர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் அவர்.

சிவநாயகம், சாயிபாபா ஆன்மீக ஸ்தாபத்தின் ஊடாக, சமய சமூகப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வந்தவராவார். கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் உருவாக்கப்பட்ட போது, அதன் ஸ்தாபக தலைவராக ஏகமனதாக தெரிவாகிய சிவநாயகம், 25 ஆண்டுகள் தொடர்ந்து அதே சாயி ஸ்தாபானத்தின் தலைவராக ஏகமனதாக தெரிவாகி வந்தார்.

1979ஆம் ஆண்டில் நாடாளுமன்ற சட்ட முறைமைகளுக்கு அமைவாக சத்ய சாயி பாபா (இலங்கை) அறக்கட்டளையகம் எனும் சாயி அமைப்பையும் சிவநாயகம் உருவாக்கினார். இலங்கையில் முதலாவதாக ஸ்தாபிக்கப்பட்ட சாயி அறங்காவலர் சபை இது என்பது குறிப்பிடத்தக்கது.

சிவா இராஜஜோதி...
பொதுச்செயலாளர், சாயிபாபா
(கொழும்பு) மத்திய நிலையம்

# புனித உம்ரா மற்றும் சுற்றுலா தொடக்க மன்றம்; சர்வதேச மாநாட்டு மையத்தில் இன்று நிகழ்வு

உம்ரா யாத்திரை மற்றும் சவூதிக்கான வருகைகள் தொடர்பான தொடக்கமன்றம் ஒன்றை இன்று 22ஆம் திகதி நடத்த, சவூதி அரேபிய ஹஜ் உம்ரா அமைச்சகம் தீர்மானித்துள்ளது. மதீனா பிராந்திய ஆளுநரான இளவரசர் சல்மான் பின் சுல்தான் பின் அப்துல்அஸீஸ் தலைமையில், மன்னர் சல்மான் சர்வதேச மாநாட்டு மையத்தில் இம்மன்றம் நடைபெறவுள்ளது.



சவூதி அரேபியாவிற்கு உம்ராவுக்காகவும் பயணிகளாகவும் வருகின்ற சர்வதேச மற்றும் உள்நாட்டு மக்களின் அனுபவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகள் மற்றும் சேவைகளை இம்மன்றம் எடுத்துக் காண்பிக்கவுள்ளது. இது சவூதி அரேபியாவின் விஷன் 2030 திட்டத்தின் இலக்குகளை அடைவதன் ஒரு பகுதியாக இருப்பதோடு, அதிக எண்ணிக்கையிலான உம்ரா யாத்திரிகர்கள் மற்றும் பார்வையாளர்கள் மக்கா மற்றும் மதீனா நகரங்களுக்கு ஈர்த்து அவர்களுக்கு சிறந்த பயண அனுபவத்தை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

பயண முகமையாளர்கள், புனித ஹஜ் உம்ரா யாத்திரை மற்றும் சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் காப்பீடு, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை உள்ளடங்கலான அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினர் போன்ற பலர் இம்மன்றத்தில் பங்கேற்கவுள்ளனர்.



உம்ரா யாத்திரிகர்கள் மற்றும் ஏனைய பார்வையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்துவதற்காக உம்ரா மற்றும் சுற்றுலாத் துறையில் உள்ள சிறப்பான விடயங்களை இம்மன்றம் எடுத்துக் காட்டுவதோடு, இது பயணிகளது தேவைகளை பூர்த்தி செய்யும் திட்டங்கள், சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதாக அமையும். இத்திட்டமானது சவூதி அரேபியாவை நோக்கி வரும் உம்ரா மற்றும் சுற்றுலாப் பயணிகளின் சவூதி அனுபவத்தை சிறந்த விதத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற அந்நாட்டுத் தலைமைகளின் ஆர்வத்திற்கான எடுத்துக்காட்டாக அமைகிறது.

இந்த உம்ரா மற்றும் சுற்றுலா மன்றத்தின் பொதுஅமர்வுகள் மற்றும் அதனுடன் இணைந்த பட்டறைகளில், பங்கேற்பாளர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவிருக்கும் அதேநேரம், கண்காட்சியில் பங்கேற்கும் பல்வேறு துறையினர் மற்றும் நிறுவனங்கள் தங்கள் புதுமையான அனுபவங்கள், சேவைகள் மற்றும் தயாரிப்புகளை பகிர்ந்து கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இம்மன்றத்தின் போது, ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சகம் புதிய வாய்ப்புகள் மற்றும் புதுமையான பணி களங்களை அறிவிக்கவுள்ளது. இது சம்பந்தமான சேவைகளை மேம்படுத்தவும், மக்கா, மதீனா மற்றும் பல்வேறு இஸ்லாமிய, வரலாற்று, தொல்பொருள் தளங்களுக்கு பார்வையாளர்களின் பயணத்தை எளிதாக்கவும் பல கூட்டு ஒப்பந்தங்கள் இதன் போது கைச்சாத்தாகவுள்ளன.



காலித் ரிஸ்வான்...

# யாழ் சிறைச்சாலையில் பெண் கைதிகளுக்கு சீர்திருத்தத் திட்டம்





இன்றைய மாறிவரும் உலகில் அதிகமான குற்றச் செயயல்கள் இடம்பெற்று குற்றவாளிகளும் அதிகரித்து வருகின்றனர். இத்தகைய குற்றவாளிகளுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களைச் சமுதாயத்தோடு இணைக்கின்ற மிக முக்கியமான பணியினை யாழ்ப்பாணம் சிறைச்சாலை வழங்குகின்றது. இங்கே 700 இற்கும் அதிகமான கைதிகள் புனர்வாழ்வளிக்கப்படுகின்றனர். அதிகளவான கைதிகள் போதைப்பொருளுக்கு அடிமையாகித் தடுத்து வைக்கப்பட்டவர்கள் ஆவர். ஆண்கைதிகள் மட்டுமன்றி பெண்கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள கைதிகளுக்குப் புனர்வாழ்வளித்து, குறிப்பாகப் பெண் கைதிகளுக்கான மறுவாழ்வுச் சிகிச்சைத் திட்டம் ஒன்றை INTERNATIONAL MEDICAL ORGANIZATION மற்றும் RATNAM FOUNDATION இணைந்து கடந்த 13.04.2024 அன்று யாழ் சிறைச்சாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தன. இது பெண்களுக்கான தையற் பயிற்சிநெறி ஆகும்.

இந்நிகழ்வை யாழ் சிறைச்சாலை ஒழுங்குபடுத்தியிருந்தது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக அனைத்துலக மருத்துவநல அமைப்பின் தலைவி ராஜம் தெய்வேந்திரம் கலந்து கொண்டு நிகழ்வினை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். யாழ் நீதவான் ஆனந்தராசா, சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமார் NAITA முகாமையாளர் திருமுருகன் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பிரதம அதிதியான ராஜம் தெய்வேந்திரம் உரையாற்றுகையில், "குற்றம் செய்தவர்கள் வாழ்நாள் முழுவதும் குற்றவாளிகள் அல்ல. சந்தர்ப்ப சூழ்நிலையால் குற்றம் நிகழ்கின்றது. இந்தக் குற்றங்களிலிருந்து நீங்கள் எவ்வாறு வெளிவர வேண்டும்? மீண்டும் இத்தகைய குற்றங்கள் இடம்பெறாது இருப்பதற்கு உங்களை எவ்வாறு தயார் செய்ய வேண்டும்? என்பதையிட்டு சிந்திக்க வேண்டும். அத்துடன் நீங்கள் உங்களுக்கான தொழில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதில் பயணிக்க வேண்டும். அதற்காகவே இச்சிறிய முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது. நீங்கள் அனைவரும் இதனை ஒரு அத்திவாரமாகக் கொண்டு உங்களுக்கான தொழிலை அடையாளம் கண்டு சமூகத்தோடு இணைந்து நற்பிரஜையாக வாழவேண்டும்" என்று குறிப்பிட்டார்.




நீதவான் ஆனந்தராஜா உரையாற்றுகையில், "நீங்கள் நற்பிரஜையாக சீர்திருத்தப்பட்டு, சமூத்தோடு உங்களை இணைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு உங்களை நான் சிறைப்படுத்தினேன். சிறைக்கு உள்ளே இவ்வாறான திட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தியமை உண்மையில் ஒரு வரப்பிரசாதம் ஆகும். இதை நீங்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

இத்திட்டத்தை இங்கு அறிமுகப்படுத்திய IMO மற்றும் RATNAM FOUNDATION ஆகிய நிறுவனங்களுக்கு பாராட்டுக்களையும் வணக்கத்தையும் தெரிவிக்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.

சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமார் உரையாற்றுகையில், இத்தகைய திட்டம் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அங்குரார்ப்பணம் செய்யப்படுவதையிட்டு தான் பெருமையடைவதாகவும், இத்திட்டத்தை அறிமுகப்படுத்திய ராஜம் தெய்வேந்திரம் அவர்களுக்கு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட பெண் கைதிகள் ராஜம் தெய்வேந்திரம் அவர்களுக்கு தமது நன்றியைத் தெரிவித்ததோடு, தமது மனக்குறைகளையும் எடுத்துக் கூறினர்.

இவ்வாறான சமுதாயத்திற்குப் பொருத்தமான சேவைகளை உரிய நேரத்தில் வழங்குகின்ற இந்நிறுவனங்களுக்கும், அவற்றில் சேவையாற்றுகின்ற உறுப்பினர்களுக்கும் பலரும் நன்றி தெரிவித்தனர்.

## வடக்கின் உதயம்

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிர்நீத்தோருக்கு நினைவஞ்சலி



உயிர்த்தஞாயிறு தாக்குதலில் உயிர் நீத்தவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வுகள்,

யாழ் மாவட்டத்தில் உள்ள சில தேவாலயங்களில் இடம்பெற்றன. இந்த வகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்திலும் உயிர் நீத்தோருக்கான ஐந்தாண்டு நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

ஒரு நிமிட அகவணக்கம் செய்யப்பட்டதுடன் தேவாலய பிரதான மணியும் ஒலிக்கப்பட்டு கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதனை யாழ்ப்பாண மறைமாவட்ட பங்கு குரு முதல்வர் ஜெயரட்ணம் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். உயிர்நீத்தவர்களுக்காக மெழுகுவர்த்தியும் ஏற்றி வைக்கப்பட்டது

இதில் கிறிஸ்தவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# சாவகச்சேரி சமுர்த்தி வங்கி அமைவிட பிரச்சினையை தீர்க்க அமைச்சர் விஜயம்



சாவகச்சேரி பிரதேச சமுர்த்தி வங்கிக்கு இடம் வழங்குவதில் ஏற்பட்டுள்ள இழுபறிக்கு தீர்வு காணும் பொருட்டு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கள விஜயம் மேற்கொண்டார். இவ்வங்கிக்கு நகர்ப்பகுதியில் இடம் வழங்குவது குறித்து,பிரதேச செயலகம் மற்றும் நகர சபைகளுக்கிடையில் இழுபறிகள் நிலவுகின்றன.இது குறித்து ஆராய்ந்து தீர்வு வழங்கவே அமைச்சர் கள விஜயம் மேற்கொண்டார்.

பொது மக்களுக்கு இலகுவான சேவையை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையிலும் குறித்த பிரச்சினைக்கு தீர்வை மையப்படுத்தியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இக்கள விஜயம் அமைந்திருந்தது.

இவ்விஜயத்தில் யாழ் அரச அதிபர் பிரதீபன், மாவட்டத்தின் சமுர்த்தி பணிப்பாளர் சத்தியசோதி,கூட்டுறவு ஆணையாளர் தேவனந்தினி பாபு, உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,சாவகச்சேரி பிரதேச செயலாளர் நகர மற்றும் பிரதேச சபை செயலாளர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர்.

# சுகாதாரத்துறை சவால்களை எதிர்கொள்ள எந்நேரமும் தயார்

## அதிகாரிகள் மத்தியில் வடமாகாண ஆளுநர்

**(கரவெட்டி தினகரன்நிருபர்)**

வட மாகாணத்தில் சுகாதார துறையில் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ள, தயாராக உள்ளதாக வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார். இவ்வாறு ஏற்படும் சவால்களை வெற்றிகொள்வதற்கு

அதிகாரிகளின் நேர்மையான செயற்பாடுகள் அவசியம் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார். வட மாகாணத்தில் சேவையாற்றும் சுகாதார துறைசார்ந்த உயர் அதிகாரிகளைச் சந்தித்து ஆளுநர் (19) பேச்சு நடத்தினார். ஆளுநர் செயலகத்தில் நடந்த விசேட கூட்டத்திலே ஆளுநர் இதனை தெரிவித்தார்.



சுகாதார சேவையை முன்னெடுப்பதில், மாவட்ட ரீதியில் நிலவும் இடர்பாடுகளை அதிகாரிகள் ஆளுநருக்கு எடுத்துக்கூறினர்.

சில பகுதிகளில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை மற்றும், பௌதீக வளப் பற்றாக் குறைகளால் பாரிய சிக்கல்கள் ஏற்படுவது குறித்தும் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இவற்றை செவிமடுத்த ஆளுநர், நோயாளர்களின் உரிமைகளை பாதுகாத்து கரிசனையுடன் செயற்பட வேண்டிய பொறுப்பு சுகாதார அதிகாரிகளுக்கு உண்டு. தரமான சிறந்த சுகாதார சேவையை பொது மக்கள் பெற்றுக்கொள்வதற்கு அரச அதிகாரிகள் அர்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

எதுவானாலும், சவால்களை எதிர்கொள்ள தாம், தயாராக உள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

# மாவட்ட அலுவலகம் திறப்பு

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் (ஈ.பி.டி.பி) மன்னார் மாவட்ட அலுவலகம் அண்மையில் (20) வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டது.

மன்னார் தாழ்வுப்பாடு பிரதான வீதியில் அமைக்கப்பட்ட இந்த அலுவலகத்தை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் ஆகியோர் இணைந்து வைபவரீதியாக திறந்து வைத்தனர்.

நீண்ட காலமாக மன்னார் மாவட்டத்தில், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் கிளை அலுவலகம் இயங்காதிருந்தது.



இந்நிலையிலே கட்சியின் கிளை அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

வைத்தியர் கதிர்காமநாதன்,ஈ.பி.டி.பி கட்சியின் மாவட்ட இணைப்பாளர்கள், இளைஞர் அணி தலைவர்,செயலாளர் பிரதேச இணைப்பாளர்கள் உட்பட பலரும் பங்கேற்றனர்.

# வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி — தேசிய நிகழ்ச்சி திட்டம்

## யாழ். மாவட்டத்தில் ஆரம்பித்து வைத்தார் அமைச்சர் டக்ளஸ்

நாடளாவிய ரீதியில் குறைந்த வருமானங் கொண்ட குடும்பங்களுக்கு தலா 10 கிலோ கிராம் அரிசி வழங்கும் தேசிய வேலைத் திட்டத்துக்கு இணங்க நேற்று யாழ், மாவட்டத்திலும் அரிசி வழங்கப்பட்டது.

மருதங்கேணி பிரதேச செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா நேற்று காலை 9.30 மணியளவில் மாவட்ட அரச அதிபர் பிரதீபனின் தலைமையில் சம்பிரதாயபூர்வமாக இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

முன்பதாக 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 25 மாவட்டங்களில் சமுர்த்தி பயனாளிகள் உள்ளிட்ட 2.74 மில்லியன் குடும்பங்களை உள்ளடக்கியதாக, ஒரு குடும்பத்திற்கு 10 கிலோ நாட்டரிசியை இரண்டு மாதங்களுக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக அடையாளங் காணப்பட்ட குறைந்த வருமானங் கொண்டவர்களின் போஷாக்கு மட்டத்தை பேணுவதற்கு ஏதுவாக இவ்வாண்டிலும் இவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்தது.

இதற்கிணங்க, 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு தலா 10 கிலோகிராம் அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தை இரண்டு மாதங்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இதனடிப்படையிலேயே நேற்றைய தினம் யாழ் மாவட்டத்தில் சம்பிரதாயபூர்வமாக அமைச்சரால் இந்த அரிசி வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



யாழ். பல்கலைக்கழக

# உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதியாக தெரிவு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் அடுத்த பீடாதிபதியாக, சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போதைய பீடதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசனின் பதவிக்காலம் எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இந்நிலையில், புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்கான விசேட பேரவை அமர்வு துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பீடாதிபதி தெரிவுக்காக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், கணக்கியல் துறை சிரேஷ்ட பேராசிரியருமான தி. வேல்நம்பி, விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கு. வேலாயுதமூர்த்தி மற்றும் விலங்கியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் க. கஜபதி ஆகியோர் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

பீடாதிபதி தெரிவுக்கு ஆர்வத்தை வெளிப்படுத்தியவர்களின் சுய சமர்ப்பணம் இடம்பெற்றது.

இதன்போது இரண்டு பேராசிரியர்களே சுய சமர்ப்பணத்துக்கு வருகை தந்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர்களிடையே இடம்பெற்ற வாக்களிப்பின் போது சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் நிலை பெற்று உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் அடுத்த பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்றாண்டுகளுக்குப் பீடாதிபதியாக செயற்படவுள்ளார்.








வீதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ், கொஸ்கமதாதுருகொட வீதியிலிருந்து தவல்கொட வரையிலான வீதி மற்றும் எஸ்வத்த வடக்குஹத்துவ குடியேற்ற வீதி ஆகியவற்றின் நிர்மாணப் பணிகளை நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன ஆரம்பித்து வைத்தபோது பிடிக்கப்பட்ட படங்கள்



கடந்த சனிக்கிழமை மன்னாருக்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பேசாலையில் அமைந்திருக்கும் சங்கவி திரையரங்கிற்கும் சென்று அதனையும் பார்வையிட்டார். அவரை சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தினதும் சங்கவி தியேட்டரினதும் உரிமையாளர் துரைராசா சுரேஷ் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவித்து வரவேற்றார்.

## இன்றைய பலன்கள்

(22.04.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம் :**
முக்கிய புள்ளிகளின் ஒத்துழைப்போடு தக்கவிதத்தில் தன வரவும் வந்து சேரும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு உண்டு.

**ரிஷபம் :**
காரியத்தை தொடங்கி விட்டால் பணம் தானாக வந்து சேரும். கேட்ட இடத்தில் உதவிகளும் கிடைக்கும். கூட்டு முயற்சியிலிருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள்.

**மிதுனம்:**
வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். வெளிநாட்டில் உள்ள உறவினர்களின் அழைப்பின் பேரில் உல்லாச பயணம் செய்யும் சூழ்நிலையும் உருவாகும்.

**கடகம் :**
உத்தியோகத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உண்டு. தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொழிலை விரிவு செய்வதற்காக கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**சிம்மம் :**
மூட்டு வலி, முழங்கால் வலி என்று ஏதாவது ஒரு தொல்லை வந்து கொண்டே இருக்கும். வாகன படுத்துகளால் வட்டம் ஏற்படும்.

**கன்னி :**
எதிர்மறை சிந்தனைகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் லாகா மாற்றம் உருவாகலாம். பொருளாதாரம் திருப்தி தரும். புதிய பயணங்கள் அதிகரிக்கும்.

**துலாம் :**
கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. வண்டி வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும்.

**விருச்சிகம் :**
தொழிலில் எதிர்பார்த்ததை காட்டிலும் கூடுதலாவும் கிடைக்கும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு பொது வாழ்வில் புகழ் குவிப்பீர்கள்.

**தனுசு :**
உடன்பிறப்புகள் குணமறிந்து நடந்து கொள்வர். கொடுக்கல் வாங்கல்கள் சீரும் சிறப்புமாக இருக்கும். வீட்டுக்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழுவீர்கள்.

**மகரம் :**
வீடு இடம் வாங்கும் யோகம் உண்டு. கட்டிய வீட்டை பழுது பார்க்கும் முயற்சி ஒரு சிலருக்கு கை ககூடும். தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும்.

**கும்பம் :**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிறப்பாக பணிபுரிந்து மேலதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவர். தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மீனம் :**
தொழில் சிறப்பாக நடைபெறும். அரசியல் களத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்பு வந்து சேரும். கைவிட்டு போன பொருள் மீண்டும் கிடைக்கும்.

## குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு...

மானியம் பெறத் தகுதி பெற்றுள்ளன. ஆயிரம் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வின் அடையாளமாக நேற்று 25 பயனாளிகளுக்கு ஜனாதிபதியினால் அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அரிசி விநியோகிக்கப்படுகிறது.

மக்கள் தமிழ், சிங்கள புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர். கடந்த இரண்டு வருடங்களில் புத்தாண்டை கொண்டாடுவது பற்றி நினைத்துக்கூட பார்க்க முடியாத சூழ்நிலையில் நாடு இருந்தது. கடந்த காலங்களில் தேவையான எரிபொருள், எரிவாயு, உரம் போன்றவற்றை வழங்க முடியாத கடினமான சூழலுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

நான், 2022 தமிழ், சிங்கள புத்தாண்டை கம்புருகமுவ பிரதேசத்தில் கழித்தேன். அங்குள்ள எரிபொருள் நிலையங்களுக்கு முன்பாக மக்கள் இரவு வரை காத்திருப்பதைக் கண்டேன். ஆட்சியாளர்களை மக்கள் கடுமையாக குற்றம் சாட்டினர். இப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து இன்று நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தை சிலருக்கு நினைத்துக்கூட பார்ப்பது கடினமாக உள்ளது.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக பல கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. அந்த முடிவுகள், மக்கள் விரும்பாததாகவே இருந்தன.

முன்னர், நாட்டின் அரசாங்கங்கள் ஒரு கட்சிக்கு உரிதானதாகவே இருந்தன. இது தவிர இரண்டு அல்லது மூன்று கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைத்திருந்தன . ஆனால் இந்த அரசு அப்படியானதல்ல. ஐக்கிய தேசியக் கட்சியில் நான் மட்டுமே இருந்தேன். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி என அனைவரும் அரசாங்கத்துடன் இணைந்தனர். இந்த அரசாங்கம் நாட்டின் தேவைக்காகவே உருவாக்கப்பட்டது. இந்த அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என சிலர் கூறினர். எப்படியிருந்தாலும், நாட்டு நலனுக்கான நோக்கங்களை வெற்றிகரமாக செயல்படுத்தினோம். அதற்காக பிரதமர் மற்றும் அமைச்சரவைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.மேலும், இந்த இக்கட்டான நேரத்தில் மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு ஆளுநர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிற அதிகாரிகள் பெரும் சேவை செய்துள்ளனர். நாம் அனைவரும் இணைந்து செயல்பட்டதா லேயே முன்னேற்றம் ஏற்பட்டதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னாலுள்ள...

வைக்க முடியாது என்றும் அனைத்து உண்மைகளும் கண்டறியப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம் பெற்று ஐந்து வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், அதனையொட்டிய விசேட நினைவேந்தல் நிகழ்வுகள், ஆராதனை வழிபாடுகள் என்பன நேற்று கொழும்பு கொச்சிக் கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் நடைபெற்றன.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் மரணம் அடைந்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி நிகழ்த்தப்பட்டு இந்த விஷேட நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

அனைத்து மதத் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட மேற்படி தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் பெரும்பாலான விசுவாசிகளும் இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

அத்துடன் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களிலும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து மௌன அஞ்சலியும் விசேட வழிபாடுகளும் நேற்று காலை இடம் பெற்றன.

ஆலயங்களில் மணி ஒலிக்கப்பட்டு காலை 8. 45 மணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்தும் நீர்கொழும்பு மாரிஸ்டெல்லா கல்லூரிக்கு அருகிலிருந்தும் இரண்டு நடை பவனிகள் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயத்தை சென்றடைந்து அங்கு வழிபாடுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சு.க.வின் பதில் தலைவராக விஜயதாச;...

சிறிசேனவின் தலைமையில் கோட்டே பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றில் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தின்போதே அமைச்சர் விஜயதாசவுக்கு இந்நியமனம் வழங்கப்பட்டது.

கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் பெயர் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாசவினால் முன்மொழியப்பட்டது. இந்த யோசனை கட்சியின் பிரதி செயலாளர் சரத் ஏக்கநாயக்கவினால் வழிமொழியப்பட்டது.

அதற்கிணங்க சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக விஜயதாச ராஜபக்ஷவின் பெயர் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ்மந்த எம்.பி. அறிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக பதவிவகித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அப்பதவியை தொடர்ந்து வகிப்பதை தடைசெய்து நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பின்னணியில், நேற்று கட்சியின் பதில் தலைவர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய பின்னணியில்ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தரப்பினர், கடந்த சில தினங்களுக்கு முன் இலங்கை மன்றக் கல்லூரியில் கூடி கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை நியமிக்க நடவடிக்கை எடுத்தனர். இந்த நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தரப்பினர் நேற்று அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை பதில் தலைவராக நியமித்துள்ளனர்.

நேற்றைய கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ்மந்த எம்.பி. கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்திற்கு அனைவரும் வருகை தந்துள்ள நிலையில் ஜனநாயகம் இன்று வெற்றிபெற்றுள்ளது என நான் நம்புகிறேன்.

இது உத்தியோகபூர்வமான கூட்டமாகும். கட்சி தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் கட்சியின் நிறைவேற்றுக்குழுவுக்கே உள்ளது. அந்தவகையில் கட்சிக்குள் மேலும் ஒரு குழு கட்சியை சீர்குலைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைக்கப் பார்க்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்கு முன்பாக நேற்று முற்பகல் அமைதியின்மை நிலவியது. மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று நடைபெற்ற நிறைவேற்றுக்குழு கூட்டத்தின் பின்னர் ஒரு குழுவினர் தலைமையகத்திற்குள் பிரவேசிப்பதற்கு முயன்ற போதே இந்த அமைதியின்மை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதியின்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சிறந்த வேலைத் திட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகிறார். இதற்காக அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படுதல் அவசியம்.

நாட்டைப் பொருளாதாரத்திலும் சுபீட்சத்திலும் கட்டியழுப்ப , அவரது வேலைத் திட்டமே வழிவகுக்கும்.எனவே, அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மத்திய மாகாண...

ஹாலிஎல என்ற புதிய விலாசத்திலுள்ள கட்டடத்துக்கு கொண்டு செல்லப் படுகிறது. இங்கு சாதாரண சேவையூடாக தேசிய அடையான அட்டைகளை பெறுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வெகு விரைவில் ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தை உள்ளடக்கும் விதத்தில் நுவரெலியாவில் இந்த அலுவலகம் திறக்கப்படுகிறது. வடமாகாணத்தை உள்ளடக்கும் விதத்தில் வவுனியாவிலும், கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கும் விதத்தில் மட்டக்களப்பிலும் தென் மாகாணத்தை உள்ளடக்கும் விதத்தில் காலியிலும் ஆட்பதிவு திணைக்களத்தின் மாகாண அலுவலகங்கள் ஏற்கெனவே திறக்கப்பட்டுள்ளன.

பிரதான அலுவலகத்தை தவிர காலியிலுள்ள ஆட்பதிவு திணைக்கள அலுவலகத்தில் மட்டுமே சாதாரண சேவையுடன் ஒருநாள் சேவையில் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படுவதாகவும், ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்தது.

## தியத்தலாவ கார் பந்தய...

பேர் உயிரிழந்ததுடன் மேலும் 21 நபர்கள் காயங்களுக்குள்ளாகினர்.

இவர்கள், ஹப்புத்தளை மற்றும் தியத்தலாவை வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களில் ஒரு சிறுமியும் உள்ளடங்குவதாகவும் காயமடைந்தவர்களில் நான்கு பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நேற்று முற்பகல் இடம் பெற்ற தியத்தலாவ Fox Hill Super Cross 2024 கார் ஓட்டப் பந்தயத்தில், பந்தயப் பாதையை விட்டு காரொன்று விலகி பயணித்ததால், இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மேற்படி விபத்து தொடர்பில் தியத்தலாவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெறவிருந்த மீதமான கார் ஓட்டப்பந்தயங்கள், இவ்விபத்தையடுத்து ரத்துச்செய்யப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள்;...

வங்கிக் குழுமத்தின் 2024 கோடைகால கூட்டத் தொடர் அண்மையில் (15) வொஷிங்டனில் ஆரம்பமானது.

இக்கூட்டத்தில் நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானும் கலந்துகொண்டிருந்தார்.

இதுகுறித்து 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டிருக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் நாட்டின் நீர்வழங்கல் துறையில் புதிய செயற்றிட்டத் தை அறிமுகப்படுத்த உலக வங்கியின் நீர்வழங்கல் பிரிவுடன் நெருங்கிப் பணியாற்றி வருகிறேன்.நீர்வழங்கல் துறை மறுசீரமைப்புக்களுக்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டுள்ளது.

உலக வங்கி, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், பல்தரப்பு முதலீட்டு உத்தரவாத முகவரகம் ஆகியவற்றின் உதவியுடன் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கடன்களை மீள் ஒருங்கிணைக்கவும், அதன் நிதியியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த இந்த இணக்கப்பாடுகள் உதவும். தனியார் துறையினரின் கூட்டிணைவின் மூலம் நீர்வழங்கல் திட்டங்களை மீள, ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றியும், அவர்கள் எதிர்கொள்ளும் சில சவால்களை உரியவாறு கையாள்வதற்கான இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளின் அவசியம் குறித்தும் உலக வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான தொழிற் பயிற்சி நிலையங்களை விஸ்தரித்தல், சிறுவர்களின் போஷணை, கல்வி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கு ஏதுவான ஆரம்ப சிறுவர் பராமரிப்பு செயற்றிட்டத்தைக் கட்டியெழுப்புதல், பெண் முயற்சியாளர்களை ஊக்குவிக்கக்கூடிய இலக்கிடப்பட்ட நிதி உதவித்திட்டங்களை அறிமுகப்படுத்தல் என்பன பற்றியும் ஆராயப்பட்டதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

## சீன துணை அமைச்சர்...

விஜயம் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர்மட்டத்தினரை சந்தித்து இவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புகளுக்கு சீனாவின் ஒத்துழைப்பு இன்றியமையாததாக உள்ள நிலையில், இவரது விஜயம் முக்கியம் வாய்ந்ததாக அமையவுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவின் அண்மைய சீன விஜயத்தின்போது இரு முக்கிய விடயங்கள் குறித்து பேசப்பட்டன. சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுக்கப்படும் பொருளாதார திட்டத்திற்கு கடன் மறுசீரமைப்பு ஊடாக ஒத்துழைக்கும் உத்தரவாதத்தை அறிவித்தல் மற்றும் சீனா, இலங்கைக்கு வழங்கியிருந்த கடன் மீள் செலுத்துகைக்கான நிவாரண காலத்தை நீடித்தல் பற்றியே பேசப்பட்டிருந்தன. இத்தவணைக் காலம் ஏப்ரல் மாதம் 18 உடன் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும், சர்வதேச கடன் மறுசீரமைப்புகளை எதிர்வரும் ஜூனுக்குள் நிறைவுபடுத்த வேண்டிய நிலையில், சீனா இதுவரையில் இலங்கையுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் உறுதியான உத்தரவாதத்தை வழங்காதுள்ள நிலையிலே யே,சீனாவின் துணை அமைச்சர் இலங்கை வருகிறார்.

## தென் மாகாண ஆளுநர்...

விலி கமகே தமது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளருக்கு கையளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் மே மாதம் இரண்டாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அவர் தமது பதவியிலிருந்து ஓய்வு பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெருந்தோட்ட வீட்டுத் திட்ட...

ஒரு வீட்டிற்கு 28 இலட்சம் ரூபா செலவிடப் படவுள்ளது. பிரதேச செயலகங்கள் மற்றும் தோட்ட நிர்வாகங்களின் ஊடாக இந்த வீட்டுத் திட்டத்திற்குத் தகுதியான நபர்கள் தெரிவு செய்யப்படுவர். இதன் நிர்மாணப்பணிகளை தேசிய வீடமைப்பு அதிகார சபை முன்னெடுக்கும். இரண்டு ஆண்டுகளுக்குள் பத்தாயிரம் வீடுகளையும் மக்களுக்கு கையளிக்க திட்டமிட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியஆரச்சி தெரிவித்துள்ளார்.

## லொறி, முச்சக்கரவண்டி விபத்து:...

விபத்து ஏற்பட்டது. முச்சக்கரவண்டியில் பயணித்த உயிரிழந்தவரின் மனைவி, மகள் மற்றும் 18 வயது பேரன் ஆகியோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கடன் ஸ்திரநிலையை ஏற்படுத்த...

அல் கலீஃபாவையும், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சந்தித்துள்ளார். நாட்டின் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை செயற்றிட்டங்களுக் காக நிதி வசதிகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாக, அப்துல் ஹமீட் அல் கலீஃபா இதன்போது தெரிவித்துள்ளார். தற்போது முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் அரசாங்கம் பின்பற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவரமைப்பின் பிரதி நிர்வாகி அஞ்சலி கௌருடனும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.

## உமா ஓய வேலைத்திட்டம்...

கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன் போது டயபரா மற்றும் புஹுல்பொல நீர்த்தேக்கங்களுக்கு சென்ற அமைச்சர் அதன் பணிகளையும் பார்வையிட்டார்.

இதனையடுத்து எல்ல கரதகொல்ல பிரதேசத்திலுள்ள உமா ஓய நீர் மின் உற்பத்தி ஆலைக்கும் அமைச்சர் சென்றார். 120 மெகாவோட் மின்சாரம் இதனூடாக உற்பத்தி செய்யப்படும். இதேவேளை மொனராகலை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களுக்கு சிறு மற்றும் பெரும்போகங்களில் நீரை விநியோகிக்கவும் உமா ஓய வேலைத்திட்டத்தின் ஊடாக வசதி கிடைக்கவுள்ளது.

## தமிழ் பொது வேட்பாளர்:...

தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் நகைச்சுவையானது. தமிழர்கள் ஓரணியில் உள்ளனர் என்ற தகவலை மட்டுமே இதன் மூலம் வழங்கலாம். மாறாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று தமிழ் பொது வேட்பாளரால் ஆட்சிக்கு வரமுடியாது. முடியாதவொரு விடயத்துக்காக எதற்கு முயற்சி எடுக்க வேண்டும்? இந்த யோசனையை நான் கண்டிக்கிறேன். இதற்கு ஆதரவு வழங்கப்போவதும் இல்லை. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுபவரின் ஆதரவு, ஒரு நேரத்தில் தமிழ் மக்களுக்கு தேவைப்படும்.சிலவேளை அனைத்து தமிழர்களும் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்தால். அது தேவையற்ற பிரிச்சினைக்கு வழிவகுக்கும். எனவே, இது முட்டாள் தனமான முயற்சியாகும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## லங்கன் விமான...

இதன்படி, ஐரோப்பிய நாடுகளுக்கான விமான நேரங்கள் மாற்றப்பட்டுள்ளதுடன், லண்டன் செல்லும் பயணிகள் குறித்த நேரத்திற்கு முன்னதாக விமான நிலையத்தை வந்தடையுமாறும் ஸ்ரீலங்கன் விமான சேவை கோரியுள்ளது.

சுமுக நிலையை கருத்திற்கொண்டு ஒரு மணிநேரத்துக்கு முன்னதாக பயணத்தை ஆரம்பிக்கவும் ஸ்ரீலங்கன் விமான சேவை முடிவு செய்துள்ளது.

பயணப்பாதை மாற்றப்படுவதால் ஏற்படும் தாமதங்களால் பயணிகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் மேற்கொண்டுள்ளதாகவும் அந் நிறுவனம் அறிவித்துள்ளது.

# சியோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு நினைவு தின நிகழ்வு



**மட்டக்களப்பு விசேட நிருபர்**

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்று 5 ஆவது ஆண்டுகள் நினைவு தின நிகழ்வுகள் மட்டக்களப்பு பிள்ளையாரடியில் அமைந்துள்ள சியோன் தேவாலயத்தில் நேற்று (21) நடைபெற்றன.

33 பேர் காவு கொள்ளப்பட்டும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்த நிலையில் உயிரிழந்தவர்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டியும் காயப்பட்டவர்கள் குணமடைய வேண்டியும் நினைவஞ்சலி ஆராதனை இடம்பெற்றது.

சியோன் தேவாலயத்தின் பிரதம போதகர் றோசான் மகேசன் தலைமையில் நடைபெற்ற ஆராதனையில் அருட்தந்தையர்கள் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனையில் அரிசி வழங்கல்



(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான இலவச அரிசி விநியோகம் செய்யும் நிகழ்வு நேற்று (21.04.2024) அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பீ.ரி. இர்பான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஏ.எல்.எம். அதாஉல்லா கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் மக்களுக்கான இலவச அரிசி பேக்குகளையும் வழங்கி வைத்தார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள அஸ்வெசும பயனாளிகள் மற்றும் சமூர்த்தி பெறும் பயனாளிகள் என சுமார் 9703 குடும்பங்களுக்கு இலவச அரிசு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கிழக்கின் குரல்

# மூதூர் கமநல சேவைகள் பிரிவில் சிறுபோக நெற்செய்கை ஆரம்பம்

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் கமநல சேவைகள் பிரிவுக்கு உட்பட்ட பெரும்பத்து, ஒட்டுப்புல்வெட்டை, 15ம் வாய்க்கால், பச்சங்குளம் மற்றும் எரிக்கிலங்காடு உள்ளிட்ட பெருநிலப் பகுதிகளில் இவ்வருட சிறுபோக நெற்செய்கைக்கான ஆரம்பப் பணிகள் தற்போது விவசாயிகளால் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறுபோக நெற்செய்கைக்கான ஆரம்ப கட்ட நீர் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மூதூர் விவசாய சம்மேளனத்தின் கீழ் இயங்கும் ஆறு விவசாய சங்கங்களின் நிருவாகிகளுக்கும் விவசாயிகளுக்கும் இம்மாத இறுதிக்குள் விதைப்பு செய்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மூதூர் கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஐ. பரீஸ் தெரிவித்தார்.

# இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் தலைமையில் உயிர்த்த ஞாயிறு நினைவு தின அஞ்சலி



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று ஐந்தாவது வருட நினைவு தின அஞ்சலி நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் இடம்பெற்றன. பிரதான அஞ்சலி நிகழ்ச்சி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் ராஜாங்க அமைச்சருமான சிவனேசத்துறை சந்திரகாந்தன் பிள்ளையான் தலைமையில் அவரது கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது கொல்லப்பட்ட உறவினர்களுடைய புகைப்படங்கள் வைக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தி மெழுகு திரி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

# திருக்கோவில் பிரதேசத்தில் இலவச அரிசி விநியோகம்

**(திருக்கோவில் தினகரன் நிருபர்)**



திருக்கோவில் 8000 வறிய குடும்பங்களுக்கு இலவச அரிசி விநியோகம். அம்பாரை மாவட்டம் திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 22 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய சுமார் 8000 வறிய குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வானது திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் தலைமையில் திருக்கோவில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

# கந்தளாய் ராஜஎல வான் மோதி 19 வயது யுவதி உயிரிழப்பு

**கிண்ணியா மத்திய நிருபர்**

கந்தளாய், ராஜஎல மூன்றாம் காலனி என்ற இடத்தில் நேற்று வான் ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தில் 19 வயதான யுவதி ஒருவர் பலியானார். கந்தளாய் நகரத்தில் உள்ள கடை ஒன்றுக்குச் சென்று, வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே, யுவதி இந்த அனர்த்தத்துக்கு ஆளாகி இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள மரம் ஒன்றில் மோதிய பின்னர் இந்த யுவதி மீது மோதியுள்ளது.

விபத்து நடந்த இடத்திலிருந்து 300 மீட்டருக்கு அப்பால், குறித்த வான் நிறுத்தப்பட்டிருப்பதாகவும், வாகன சாரதி, தலைமறைவாகி இருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


ST&S SINCE 1892 — sade sri-lanka

## சாட் ஸ்ரீ லங்கா

மோட்டார் வாகனங்கள், 40 மற்றும் 20 அடி கொள்கலன்கள் மற்றும் கன்வெர்டெய்னர்கள், இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள், அலுவலக மற்றும் நீர் வழங்கல் திட்ட உபகரணங்களின் ஏல விற்பனை.

2024 ஏப்ரல் 27 சனிக்கிழமை
கொழும்பு 07, பௌத்தாலோக மாவத்தையிலுள்ள
BMICH இன்
“மிஹிலக்க மெதுர” மண்டபத்தில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

ஏப்ரல் 24 புதன் முதல் 26 வெள்ளி வரை காலை 9:00 மணி தொடக்கம் மாலை 5:00 மணி வரை பின்வரும் இடங்களில் பார்வையிடலாம்.

**(நிலையம் 01) இல. 41/15, நாகஹமுல்ல வீதி, பெலவத்த**

எயார்மேன் டீசல் ஜெனரேட்டர், EIE **பிரசர் டெஸ்டிங் பம்ப்ஸ்**, பட் பியூசன் அன்ட் **எலெக்ட்ரோ.ஃபியூஷன் மெஷின்ஸ்**, மல்டி-புரசஸ் இன்டஸ்ரியல் வெல்டிங் மெஷீன், **செயின்சவ் பகேஜ்**, புளோர் சவ், DI/**ஹியூம் பைப் மெனுவல் கட்டர்**, ஜம்பிங் கம்பக்டர், **வெப் ஸ்லிங் லி.ஃப்டிங் பெல்ட்கள்**, கேஸ் டிடக்டர் கிட், **வோட்டர் பிரசர் பம்ப்**, செய்ன் புளொக், **ஷோரிங் பிளேட்டுகள்**, பல்வேறு அளவுகளில் கல்வனைஸ்ட் தெரெட் பார் / போல்ட்ஸ் வித் நட்ஸ் அன்ட் வோசர்கள், **GI பைப்புகள்/ கட் பீசஸ் /கிளிப்புகள்**, ஸ்லிங் கேபிள்கள், **சுழல் கொக்கிகள்**, HDPE பிட்டிங்ஸ், **டக்டைல் இரும்புக் குழாய்கள் மற்றும் பிட்டிங்குகள்**, ராட்செட் ஸ்ராப்ஸ், **பெரிகேட்/ டிடக்டபில் வோர்னிங் டேப்**, பாதுகாப்பு பெல்ட் ஹார்னெஸ்கள், **பாதுகாப்புக் கருவிகள்**, பிட்டுமிக்ஸ் கட்டிங், **கணினிகள் /LED ஸ்கிரீன்கள் /மல்டி மீடியா புரஜக்டர் / மடிக்கணினிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள்**, தீ அணைப்பான்கள், **ஸ்டான்டுடன் 1000 லீ. நீர்த் தொட்டி**, அலுவலக பாட்டிசன்கள் மற்றும் தளபாடங்கள்.

**(நிலையம் 02) SADE மாத்தளை பாரிய நீர் வழங்கல் திட்ட வளாகம், பரவத்த வீதி, களுதாவளை, மாத்தளை**

(LN XXXX) ஐச்சர் டிரக் 3 தொன் கொண்ட அரை பொடி லோடர் - 2017, (ZA XXXX) துஊடீ லோட் ஓல் 530-110 வித் கேன் ஹுக் - 2018, (ZA XXXX) துஊடீ பெக்ஹோ லோடர் 3ஊஓ - 2018, JCB MSB சாகா மாதிரி 55H பெக்ஹோ லோடருக்கான ராக் பிரேக்கர், (எண்ணிக்கை 13) 40 பு.ட் கன்டெய்னர்கள், (எண்ணிக்கை 01) 20 பு.ட் கன்டெய்னர், (எண்ணிக்கை 01) 40 2 யு.ஊ கொண்ட .புட் அலுவலக கன்வெர்டெய்னர்இ (எண்ணிக்கை 01) 20 .புட் அலுவலக கன்வெர்டெய்னர்இ (எண்ணிக்கை 03) 20 A/C உடன் .புட் அலுவலக கன்வெர்டெய்னர்இ (எண்ணிக்கை 01) 20 பு.ட் செனிட்டரி கன்வெர்டெய்னர், 210 லீ. வெற்றுப் பீப்பாய்கள்.

விற்பனை நிபந்தனைகள்
- பிரவேசம் : ஏலவிற்பனை நடைபெறும் தினத்தில் உட்பிரவேசிப்பதற்கு தலா ஒருவருக்கு மீளச் செலுத்தப்படாத ரூபா 2,00/- பிரவேசக் கட்டணமாகச் செலுத்தப்படுவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 100,000/- வைப்புச் செய்யப்பட வேண்டும்.
- கொடுப்பனவுகள் : விற்பனை முடிவின் போது மொத்த விலையில் மீளச் செலுத்தப்படாத 50% பணமாகச் செலுத்தப்பட வேண்டும். எஞ்சிய 50% ஐ **2024 ஏப்ரல் 30 செவ்வாய் பி.ப 03.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இல. 6A, .பெயார்பீல்ட் கார்டன்ஸ், கொழும்பு 08 என்ற முகவரியில் அமைந்துள்ள ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம நிறுவனத்தில் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், அன்றைய தினமே பொருட்களும் அங்கிருந்து அகற்றப்படல் வேண்டும்.
- முன்னறிவிப்பு இன்றி ஏலவிற்பனையிலிருந்து எந்தவொரு பொருளையும் அகற்றும் உரிமை முகாமைத்துவத்திற்கு உள்ளது.
- ஏலதாரரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம**®
ஒரே தேசம். ஒரே ஏலவிற்பனையாளர்.

தலைமை அலுவலகம்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி: 081-2227593
தொலை/.பக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671465, 011-2671468
தொலை/.பக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

081 2227593
www.sandslanka.com



ST&S SINCE 1892 — softlogic Finance

## சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி மாபெரும் வாகன ஏலவிற்பனை

39 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்கள்
2024 ஏப்ரல் 25 வியாழக்கிழமை
இல. 463, கண்டி வீதி, களனி
என்ற முகவரியில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

கார்கள்:

| | | |
|---|---|---|
| CAY-8xxx | டொயோட்டா DBA-NZT260 பிரீமியோ | 2016 |
| CAN-0xxx | சுசூகி DAA-MH44S வெகன் R | 2015 |
| CAA-6xxx | மைக்ரோ பண்டா L.C 1.0 | 2014 |
| CAN-2xxx | சுசூகி DAA-MH44S வெகன் R | 2014 |
| CAJ-1xxx | ஹொண்டா DAA-GP5-FIT | 2013 |
| KT-7xxx | மைக்ரோ பண்டா CROSS | 2012 |
| KR-7xxx | மைக்ரோ பண்டா LC 1.3 | 2011 |
| KL-2xxx | டொயோட்டா DBA-NZE141 | 2007 |
| KE-2xxx | டாட்டா இன்டிகோ மரினா GLX | 2006 |
| JW-1xxx | மாருதி E-BFTP பெமிலியா | 2005 |
| KA-3xxx | டாட்டா இன்டிகோ மரினா | 2005 |
| HL-4xxx | டாட்டா இன்டிகாஎ-LXI | 2003 |
| 301-6xxx | மிட்ஷுபிஷி லான்சர் | 1998 |
| 19-2xxx | மஸ்டா E-BG3P- பெமிலியா | 1991 |
| 64-0xxx | நிஸான் BHAB13 சனி | 1991 |

ஜீப் வண்டி:

| | | |
|---|---|---|
| HV-8xxx | மிட்ஷுபிஷி பெஜரோ ஜீப் | 2000 |

வேன்கள்:

| | | |
|---|---|---|
| PC-1xxx | சுசூகி EBD-DA64V எவ்ரி | 2007 |
| PC-1xxx | மஸ்டா KR-SKF2M | 2006 |
| PB-0xxx | மஸ்டா - E-SG5W | 1997 |
| 252-2xxx | மஸ்டா SSF8W | 1994 |
| 60-6xxx | நிஸான் DYGE24DFV | 1988 |
| 51-3xxx | மிட்ஷுபிஷி டெலிகா | 1987 |

டிப்பர்

| | | |
|---|---|---|
| LH-8xxx | லங்கா அசோக் லேலன்ட் கொமெட் டிப்பர் 1613 | 2010 |

பஸ்

| | | |
|---|---|---|
| NB-0xxx | லங்கா அசோக் லேலன்ட் வைக்கிங் | 2011 |

மோட்டார் லொறிகள்:

| | | |
|---|---|---|
| DAF-2xxx | கேக்கி SC1021CD11 | 2016 |
| DAG-5xxx | டைஹட்சு EBD-S500P ஹிஜெட் | 2015 |
| DAA-9xxx | DFSK EQ1020DR | 2015 |
| PX-6xxx | மஹிந்ட்ரா பொலேரோ மெக்ஸி டிரக் | 2014 |
| LP-1xxx | மிட்ஷுபிஷி TKG-FEB50 | 2014 |
| PV-4xxx | மஹிந்ட்ரா மெக்ஸிமோ பிளஸ் | 2013 |
| PV-2xxx | மஹிந்ட்ரா மெக்ஸிமோ | 2013 |
| PR-9xxx | மஹிந்ட்ரா பொலேரோ மெக்ஸி டிரக் | 2011 |
| PQ-0xxx | டாட்டா ஏஸ் | 2011 |

முச்சக்கர வண்டிகள்:

| | | |
|---|---|---|
| AAG-4xxx | பஜாஜ் RE205 | 2013 |
| QX-9xxx | பஜாஜ் AR4S-UG | 2010 |
| YE-8xxx | பஜாஜ் AR4S-UG | 2010 |

மோட்டார் சைக்கிள்கள்:

| | | |
|---|---|---|
| BIU-0xxx | ஹொண்டா கிரேஸியா அப்ஸ் | 2020 |
| BHV-3xxx | ஹீரோ மெஸ்ட்ரோ | 2018 |
| XV-3xxx | TVS ஸ்கூட்டி பெப் | 2012 |

பார்வையிடல் - ஏலவிற்பனை நிலையத்தில்
2024 ஏப்ரல் 23 முதல் பார்வையிடலாம்.
(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்
- **நுழைவு** : ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- **கொடுப்பனவுகள்** : விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2024 ஏப்ரல் 29ஆந் திகதி திங்கட்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், இல. 305B, நாவல வீதி, நாவல என்ற முகவரியில் அமைந்துள்ள சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரர் / சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி யின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம**®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

011 2671468
www.sandslanka.com

# கலாநிதி ஏ.டி ஆரியரத்னவின் இறுதிக்கிரியைகள் கொழும்பில்













கலாநிதி ஏ. டி. ஆரியரத்னவின் இறுதிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் ( 20) சுதந்திர சதுக்கத்தில் அரச மரியாதையுடன் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இரங்கல் செய்தியை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன வாசித்தார்.

அச்செய்தியில் கலாநிதி ஏ.டி. ஆரியரத்னவும் நானும் பல சமூகப் பணிகளில் நெருக்கமாகப் பணியாற்றினோம். மக்களில் மறைந்திருக்கும் மக்களின் ஆற்றலைப் பயன்படுத்தி மக்களை உயர்த்துவதே அவரது இலட்சியமாக இருந்தது. ஆரியரத்னவின் இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு புகழ்பெற்ற சர்வோதய அமைப்பை உருவாக்கினார்.

பல்வேறு சவால்களை எதிர்கொண்டு சர்வோதய அமைப்பை அவர் இந்த நாடு முழுவதும் பரப்பினார், அவரது தன்னார்வ தொண்டு நிறுவனத்தை (NGO ) பலரும் அவமதித்தாலும் அதனால் மனம் தளர்ந்து விடாமல் தனது சேவையை நாட்டுக்காக அவர் நிறைவேற்றினார்.

இறுதியில் இந்நாட்டில் மாத்திரமல்ல சர்வதேசத்திலும் சர்வோதய என்னும் பெயரை பிரபலப்படுத்த அவரால் முடிந்தது. தேசபந்து, ஸ்ரீலங்காபிமானி போன்ற பல தேசிய விருதுகளையும் அமைதிக்கான பரிசு, ஆசியாவின் நோபல் பரிசாகக் கருதப்படும் மெக்சேயிசே விருது போன்ற பல சர்வதேச விருதுகளையும் இவர் பெற்றுள்ளார். கலாநிதி ஏ. டி. ஆரியரத்னவின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கும் எனது மற்றும் பேராசிரியை மைத்திரி விக்கிரமசிங்கவின் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதாக அவ் இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டும்

## வடிவேல் சுரேஷ் ஜனாதிபதியிடம் கோரிக்கை



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனத்தை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஊவா பரணகம, அம்பகஸ்தோவ மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துரைத்த வடிவேல் சுரேஷ்; நாடு அசாதாரணமான சூழ்நிலையில் இருந்த போது தைரியமாக நாட்டை மீட்டெடுக்க முன்வந்த தலைவர் என்ற வகையில் பல வேலைத் திட்டங்கள் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டது. நாட்டு மக்கள் போக்குவரத்துக்கே சிரமப்பட்டு இருந்த காலம் ஒன்று இருந்தது. அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசைகளில் நின்றிருந்த காலமும் இருந்தது. இன்று அனைத்தும் மாறி உள்ளது. நாடு மெதுவாக பழைய நிலைமைக்கு திரும்பி வருகின்றது.

நாட்டை மீட்டெடுத்து வெற்றி கண்டதைப் போன்று நாட்டின் பொருளாதாரத்தை முதுகில் சுமக்கும் மலையக மக்களின் ஒரு நாள் வேதனத்தை அதிகரிக்கவும் ஜனாதிபதியால் முடியும் என்ற நம்பிக்கை நம் அனைவருக்கும் உள்ளது. தோட்ட நிறுவனங்களுக்கு அழுத்தம் பிரயோகித்து தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

# கொட்டகலையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

*தலவாக்கலை குறூப் நிருபர்*



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக 1700 ரூபா வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கொட்டகலை நகரில் நேற்று (21) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. கொட்டகலை பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அமைப்பாளருமான ராஜமணீ பிரசாத் ஏற்பாட்டில் நூற்றுக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் இப்போராட்டம் நடைபெற்றது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபா நாட் சம்பளமாக வழங்குமாறு வலியுறுத்தி கொட்டகலை நகர வர்த்தகர்கள் கடைகள் அனைத்தையும் மூடி கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புத்தாண்டு சிறப்பு



101

அமைதியும் புரிந்துணர்வும் கூடிய நல்வாழ்வு அமையட்டும் தமிழ் வருடங்களில் 38வது வருடமான சுப மங்களகர குரோதி என்னும் நாமத்துடன் பிறந்திருக்கும் தமிழ் புத்தாண்டானது சிறப்பான ஒரு வருடமாக அனைவருக்கும் அமைய வேண்டும். உலக மக்கள் அனைவரும் கடந்த தசாப்த காலமாக பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளோம். அனைத்து சமயங்களும் வாழ்வியலை வழிகாட்டி சுட்டி நிற்கின்ற அதே வேளையில் எமது சமயமானது அன்பு, கருணை, கொல்லாமை , பிறருக்கு தீங்கு செய்யாமை, புரிந்துணர்வு போன்ற நற்செயல்களை சுட்டி நிற்கிறது. இவை போன்ற விடயங்கள் தொலைத்துவிட்டோம் என்கின்ற காலப்பகுதியிலே நாம் அனைவரும் இருக்கிறோம் . நாம் எமது குடும்ப உறவுகளிடம் அன்பு செலுத்துவது போல் ஏனைய இனத்தார், சமூகத்தினர், சமயத்தாருடன் அன்பு செலுத்துதல் வேண்டும்.

மேலும் ஒவ்வொருவருடைய தனித்துவ பண்பாட்டினை மதித்துப் போற்ற வேண்டியது சிறப்பானதும் பிரதானமான ஒன்றாக காணப்படுகிறது. நாம் தமிழ், சிங்கள புத்தாண்டை மகிழ்வாய் கொண்டாடினோம். அதனைப்போல ஒவ்வொரு கணமும் அமைய வேண்டும். ஒவ்வொரு விடயத்திலும் அமைய வேண்டும். மகிழ்ச்சியும் அதிகரிக்க வேண்டும் புது வருடத்தில் நாம் அனைவரும் இறை பிரார்த்தனையுடன் கூடிய இன்பகரமான வாழ்வு வாழ வேண்டும் என பரம்பொருளை வேண்டி இறை பிரார்த்தனை செய்கிறோம். இச்சமயத்திலே இந்து



குருமார் அமைப்பின் சார்பில் வழிகாட்டுதலையும் நிறைந்த இறை பிரார்த்தனையும் நல்லாசிகளையும் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.அமைதியும் புரிந்துணர்வும் கூடிய நல்வாழ்வு அமையட்டும்

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# நினைத்தது நிறைவேறும் சித்ரா பௌர்ணமி



பொதுவாக பௌர்ணமியானது மிகவும் விஷேசமான ஒன்றாகும். மாதம் தோறும் வருகின்ற பௌர்ணமியன்று விரதம் இருந்து தேவியை வழிபட்டு வந்தால் எல்லா செல்வங்களும் குறைவில்லாமல் கிடைக்கும். மற்ற மாதங்களில் வருகின்ற பௌர்ணமியை விட சித்ரா பௌர்ணமியானது முக்கியமானதாகும். சித்திரை நட்சத்திரமும் சேர்ந்து வந்துவிட்டால் இன்னும் சிறப்பானதாகும்.

சித்திரா பௌர்ணமி என்பது சித்திரை மாதம் பௌர்ணமி திதியில் சித்திரை நட்சத்திரமும் கூடி வருவருவதால் சித்திரா பௌர்ணமி என அழைக்கப் பெறுகின்றது. மாதத்தின் பெயரும் நட்சத்திரத்தின் பெயரும் ஒன்றாகி (சந்திரன் சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கையில்), சூரியன் உச்ச பலம் பெறும் மேட இராசியில் (சித்திரைமாதத்தில்) வரும் பௌர்ணமி தினம் சிறப்புப் பெறுகின்றது.

இத் தினத்தில் ஆலயங்களிலே குறிப்பாக அம்பாள் ஆலயம் உட்பட எல்லா அம்மன் ஆலயங்களிலும் பால் குடங்கள் எடுப்பது, திருவிளக்கு பூஜை, விஷேச அபிஷேக ஆராதனைகளும், வழிபாடும் சித்திரைக் கஞ்சி வார்ப்பும் இடம்பெறுகின்றது. சில ஆலயங்களில் பொங்கல் விழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

சிவாலயங்களிலும், பெருமாள் (விஷ்ணு) கோவில்களிலும் சிறப்பு அபிஷேகங்கள், இறை வழிபாடு, வீதி ஊர்வலங்கள் என்றும் சிறப்பாக நடைபெறுகின்றன. அம்மனுக்குச் சிறப்புப் பொருத்திய இச்சித்திரா பௌர்ணமி விரத நாளிலேயே எமனின் சபையில் நம் பாவ புண்ணியக்கணக்கை இம்மியும் பிசகாமல் எழுதும் சித்திரகுப்தன் அவதரித்த நாளாகவும் இது கருதப்படுவதால் சித்திர புத்திரனார் விரதமும் அமைகின்றது.

சித்ரா பௌர்ணமி ஏன் கொண்டாடப்படுகிறது?

சித்ரா பௌர்ணமி ஒரு தனிநபரின் நல்ல செயல்கள் மற்றும் தீய செயல்கள் பதிவு செய்யப்படுகின்றன மற்றும் அதற்கேற்ப வெகுமதி அளிக்கப்படும் என்று வலியுறுத்துகிறது.

பூமியில் வாழும் போது நமது செயல்கள் விளைவுகளை ஏற்படுத்தாது. ஆனால் அவை மரணத்திற்குப் பிறகும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். சித்ரா பௌர்ணமி என்பது சடங்குகள் மற்றும் பூஜைகள் மூலம் பாவங்களை போக்க ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

**சித்ரா பௌர்ணமி விரதம் இருப்பது எப்படி?**

சித்ரா பௌர்ணமியன்று வீட்டைச் சுத்தம் செய்து பூஜை அறையில் விநாயகர் படத்தை வைத்து அரிசி மாவால் சித்ரகுப்தன் படம் வரைந்து கையில் ஏடும், எழுத்தாணியும் வரைய வேண்டும். சித்ரகுப்தா என்று சொல்லிக்கொண்டு இருக்க வேண்டும். அன்று உப்பில்லாத உணவுகளையே உண்ண வேண்டும்.

மாலையில் பௌர்ணமி தினம் உதயமானதும் சித்ரகுப்தனுக்கு பூஜை செய்ய வேண்டும். தலைவாழை இலையில் சர்க்கரைப் பொங்கல் அல்லது வெண் பொங்கலைப்படைக்கவேண்டும். பயிற்றம்பருப்பு, எருமைப்பாலும் சேர்த்து பாயசம் செய்து நிவேதனம் செய்யலாம்.

மேலும், அன்றைய தினம் வைக்கும் குழம்பில், தட்டைப்பயறும், மாங்காயும் சேர்த்து வைப்பது வழக்கம். ஜவ்வரிசிப் பாயசம் வைத்து. பூஜை அறையின் நடுவில் கோலமிட்டு, அதன் மேல் குத்துவிளக்கு ஏற்றி வைத்து, சங்கு ஊதி வழிபடுவது அவசியமாகும்.

பௌர்ணமி விரதம் இருப்பவர்கள், விரதத்தைத் தொடங்க வேண்டிய நாள் சித்ரா பௌர்ணமிதான். விரதத்தை முழுமையாகக் கடைப்பிடிப்பவர்கள் இரவு நிலவு பார்த்த பின் உணவு அருந்த வேண்டும்.

தொடர்ந்து தீபாராதனை காட்டி ஏழைகளுக்கு முடிந்த அளவு தானம் கொடுக்க வேண்டும். ஏழை மாணவர்களுக்குப் பேனா, பென்சில், நோட்டு கொடுக்கலாம். அன்னதானம் செய்வது மிகவும் சிறந்தது.

சித்ரா பௌர்ணமியன்று விரதமிருந்து சிவாலயங்களில் கிரிவலம் வர நாம் பாவவினைகளை போக்கி புண்ணியம் தேடிக்கொள்ள முடியும்.

சித்ரா பௌர்ணமி விரதம் இருந்து சிவபெருமானை வேண்டிக்கொண்டால் நினைத்தது நிறைவேறும். ஆயுளை அதிகரிக்கச் செய்யும் ஆற்றல் இந்த விரதத்திற்கு உண்டு. மேலும், மன அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும், வறுமை அகலும். புண்ணியங்கள் சேரும்.

திருமணத்தடை நீங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். சித்ரா பௌர்ணமி அன்று திருவண்ணாமலையில் கிரிவலம் சென்று அன்னதானம் செய்தால் கல்வி, வேலை, பதவி, அரசியல், ஆரோக்கியம், திருமணம், வழக்கு குடும்பப் பிரச்னைகள் நீங்கி மேன்மை உண்டாகும்.

எனவே இந்தப் புனித தினமான சித்திரா பௌர்ணமியில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் மறைந்த தாயாரையும் எல்லாம் வல்ல தாயாக விளங்கும் பராசக்தியையும் வழிபட்டு அருளும் ஆசியும் பெற்று வாழ்வோமாக.




# மாத்தளை, வெள்ளைக்கல் அழகர் பெருமாள் ஆலய வருடாந்த உற்சவம்

மாத்தளை, வெள`ளைக்கல், அருள் மிகு அழகர் பெருமாள் திருக்கோயிலின் வருடாந்த உற்சவம் கடந்த 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அன்று தொடக்கம் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும் பூஜைகள் நடைபெற்று வருகின்றன. தினமும் நடைபெறும் இந்த பூஜைகளைத் தொடர்ந்து வசந்த மண்டப பூஜையும் சுவாமி உள்வீதி உலா வருதலும் இடம் பெற்று வருகின்றன.

சித்திரா பௌர்ணமியான நாளை 23 ஆம் திகதி காலை 11 மணிக்கு அழகர் சுவாமிக்கு அபிஷேகமும் அலங்கார உற்சவமும் உள்வீதி உலா வருதலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜை நடாத்தப்பட்டு அன்னதானமும் வழங்கப்படும்.

நாளை இரவு 7 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் சுவாமி உள்வீதி உலா வருதலும் இடம்பெறும் நாளை மறுதினம் 24ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் கொடியிறக்கமும் ஸ்ரீ கருப்பண்ண சுவாமி பூஜையும் நடைபெறும். 25ஆம் திகதி இரவு 7 மணிக்கு ஸ்ரீ வைரவர் மடையும் விஷேட பூஜையும் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா மு. சபாபதி தெரிவித்தார்.



## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19976. ஐந்து சபைகள் என அழைப்பது எதனை?**
இறைவனான சிவபெருமான் நடனமாடி சிறப்பித்த ஐந்து இடங்களையாகும்.

**19977. இச்சபைகளை வேறு எவ்வாறு அழைப்பார்கள்?** பஞ்ச சபைகள்,

**19978. பஞ்ச சபைகளுக்கு வேறு பெயர்கள்?** ஐம்பெரும் சபைகள்

**19979. அந்த ஐந்து சபைகளும் எவை?**
பொற்சபை, இரஜித சபை , இரத்தின சபை, தாமிர சபை, சித்திர சபை ஆகியவையே

**19980. வெள்ளி சபை என்று எதனை அழைப்பார்கள்?** இரஜித சபையை

**19981. இந்த ஐந்து சபைகளும் எங்கு அமைக்கப்பட்டுள்ளன.?**
முறையே சிதம்பரம், மதுரை, திருவாலங்காடு, திருநெல்வேலி, குற்றாலம் ஆகிய இடங்களில் உள்ள சிவாலயங்களில் அமையப் பெற்றுள்ளன.

**இனி ஐந்து சபைகளைப் பற்றிப் பார்ப்போம்.**

**19982. பொற்சபை எங்கு அமைந்துள்ளது?**
சிதம்பரத்தில்

**19983. சித்பரத்தில் உள்ள சிவன் ஆலயத்தின் பெயர் என்ன?**
திருமூலட்டநாதர் திருக்கோயில்

**19984. இரஜித சபை எங்கு அமைந்துள்ளது?** மதுரையில்

**19985. மதுரையில் உள்ள சிவன் ஆலயத்தின் பெயர் என்ன?**
மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்



**19986. இரத்தின சபை எங்கு அமைந்துள்ளது? திருவாலங்காட்டில் — திருவாலங்காட்டில் உள்ள சிவன் ஆலயத்தின் பெயர் என்ன?** வடராண்யேஸ்வரர் திருக்கோயில்

**19987. தாமிர சபை எங்கு அமைந்துள்ளது? —**
நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி

**19988. சித்திர சபை எங்கு அமைந்துள்ளது? ——**
குற்றாலத்தில்

**19989. குற்றாலத்தில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தின் பெயர் என்ன?** குற்றாலநாதர் திருக்கோயில்,

**19990. பொற்சபை எங்கு அமைந்துள்ளது?**
கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில்

**19991. கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தின் பெயர் என்ன?**
திருமூலட்டநாதர் திருக்கோயில்

**19992 ஐந்து சபைகள்சிதம்பரத்தில் இறைவன் எப்படி அருள்பாலிக்கின்றார்?** நடனத்தின் நாயகனாக நடராஜனாக

**19993 இவர் தனது திருநடனத்தை யாருடன் புரிகின்றார்?**
உமையம்மையுடன்

**19994 நடராஜர் நடனமாடிய இவ்விடத்தை என்னவென்று அழைப்பார்கள்?**
பொற்சபை,

**19995. பொற்சபையை வேறு எவ்வாறு அழைப்பார்கள்?** பொன்னம்பலம், கனக சபை, பொன் மன்றம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

**19996. இங்கு இறைவன் எப்படி நடனமாடுகின்றார்?**
இடது காலை ஊன்றி வலது காலைத் தூக்கி நான்கு கரங்களுடன் நடனமாடுகிறார்.

**19997. இவ்விடத்தில் ஆடிய இறைவனின் திருநடனத்தை எவ்வாறு அழைப்பார்கள்?**
ஆனந்த தாண்டவம்

**19998. இங்கு இறைவன் எப்படி திருநடனத்தை காட்டி அருளுகிறார்?**
பொன்னால் ஆன கூரையின் கீழ் தனது திருநடனத்தைக் காட்டியருளுகிறார்.

**19999. இத்தலத்தில் உள்ள இறைவன் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?**
பொன்னம்பலவாணன், நடராஜன், கனக சபாபதி, அம்பலவாணன், ஞானக்கூத்தன் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

**20000. இறைவனின் திருநடனத்தைப் போற்றும் வகையில் இங்கு ஆண்டுதோறும் என்ன நடைபெறும்?**
நாட்டியாஞ்சலி விழா நடைபெறுகிறது.

**20001. இங்குள்ள மூலவர் என்ன பெயரில் அருள்பாலிக்கின்றார்?**
திருமூலட்டநாதர் என்ற பெயரில்

**20002. அம்பாள் என்ன பெயரில் அருள்பாலிக்கின்றார்?** சிவகாமி

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 84



மனித வாழ்க்கைக்கும் ஒரு மூல விதை உள்ளது. அதனை நாம் கடவுள் என்றும், பரப்பிரம்மம் என்றும் பரமாத்மா என்றும் பகருகிறோம். மூலவிதையான பரமாத்மாவிடமிருந்து நாம் விலகிச் செல்வதால் தான் மனிதர்களாகிய நாம் அமைதியிழந்து, புனிதம் கெட்டு தனிப்பட்டு நிற்கிறோம்.

வாழ்க்கையின் மூலாதாரமாக இறைவனுடன் நாம் நம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் அவன் மனம் விசாலமடையும். சமுதாயக் கடலில் மூழ்குவதால் தனி மனிதன் தன்னுடைய அகந்தை, சுயநலம். பதுக்கல், ஹிம்சை. சூழ்ச்சி போன்ற தீயவைகளிலிருந்து விடுபடமுடியும். பரமாத்மாவுடன் ஒன்று சேர்வதால். பொறாமை, தனிமை மரண பயம் போன்றவை நீங்கும். விளங்கும்

நாலாபுறமும் பரவியிருப்பது மரத்தின் இயல்பு, நாமும் பரந்த மனப்பான்மையுடன் செயல் புரிவோம். வீடு, குடும்பம், சமூகம், தேசம். உலகம் ஆகியவைகளுடன் அன்பு, பாசம், மரியதை நற்குணம் வெளிப்படுத்துவோம். நிழல் வேண்டுவோர்க்கு நிழலாகவும், மழை வேண்டுவோர்க்கு மழையாகவும், உதவி வேண்டுவோர்க்கு உதவி வழங்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும். தனி மனிதனாக இருந்து உதவுவதை விட சமூகத்துடன் சேர்ந்து உதவும் போது பரந்தளவில் உதவிட முடியும்.

நம் நிலை உயரும் போது நாம் கடவுளை மறந்து விடக் கூடாது. மறந்தால் மீண்டும் நாம் ஜடப் பொருளாகி விடுவோம். அந்த ஜடப் பொருள்களிலிருந்து விலகி, மேம்பட்டு இறைவனை பரமாத்மாவை அடைவதற்காகத்தான் இந்த நமக்கு மானுடப்பிறவி கிடைத்துள்ளது.

சின்னதாக ஒரு சங்கடம் வந்து விட்டாலே பலர் பெரிய அளவில் பயந்து குய்யோ முய்யோ என கதறுவதை நாம் பார்த்துள்ளோம். கடவுள் மீதே அவர்களுக்கு அவநம்பிக்கை வந்து விடுகிறது. இது முறையல்ல, சரியல்ல. வாழ்வில் எந்நேரமும், எப்போதும் பிரச்சினைகள் வரத்தான் செய்யும். அதற்காக, நாம் கலங்கி விடக் கூடாது. இம்மாதிரியான சங்கடங்கள் கடவுள் தன் குழந்தைகளிடம் விளையாடும் ஒரு விளையாட்டு என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பேப்பரில் வரையப்பட்ட பூதம், சிங்கம், புலி போன்ற முகமூடி அணிந்து கொண்டு ஒரு தந்தை குழந்தைகளிடம் வேடிக்கை காட்டுவது போலவே சில சங்கடங்களை தந்து கடவுளை நம்மிடம் விளையாடுகிறார். தன் தந்தை முகமூடி அணிந்து பயப்படச் செய்வதை பழகிப்போன பின் குழந்தை பயப்படுவதை நிறுத்திக் கொள்ளும். இதே போல் சங்கடங்கள் தாங்கி கொள்ளக் கற்றுக் கொள்ளும் போது எப்பிரச்சினைகளையும் எதிர்த்து போராடும் குணம் நமக்கு உண்டாகும்.

கடவுள் மீது முழு நம்பிக்கை கொள்ளாதவனுக்குத் தான் பிரச்சினைகள் பயமுறுத்தும். அப்படிப்பட்டவன் தான் சூழ்நிலையை கண்டு பயப்படுகிறான். எவன் கடவுளிடம் முழு நம்பிக்கை வைத்துள்ளானோ, கடவுளை சர்வ ஒருவன் வல்லமை படைத்தவனாகக் கருதுகிறானோ, கடவுள் நிச்சயம் நமக்கு கருணை காட்டுவார் என நம்புகிறானோ, கடவுளை தாய் தந்தையாக கருகிறானோ அவனுக்கு எந்த சூழ்நிலையும் நல்லதையே செய்யும். கடவுளின் தொடர்பை துண்டித்துக் கொண்டவனே அனைத்திற்கும் பயப்படுவான்.





கண்டி நகரில் அமைந்திருக்கும் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவிலில் லகு கும்பாபிஷேகம் நேற்று இடம்பெற்றது.

படங்கள் : நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் T. வசந்தகுமார்

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

117

### வேன்கள் விற்பனைக்கு

2539775 NISSAN - CARAVAN -VAN -1995 - WHITE BLUE அதியுயர் விலைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட், 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொலைபேசி 081 2081033. 026497

122

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

AAF - 6892 Bajaj 2012, Threewheel - அதியுயர் விலைக்கு, வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி இல . 310, கா லி வீ தி, கொழும்பு 03 தொலைபேசி 0711210 8 10 026171

YR - 0257 TVS KING 20 11, Three Wheel அ தியுயர் விலைக்கு, வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி இல . 310, கா லி வீ தி, கொழும்பு 03 தொலைபேசி 0711210 8 10, 07 0599916 3 026174

# விலைமனு கோரல்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

## இரும்பிலான உலோக சட்டங்களை (Rack) கொள்வனவு செய்தல்

1. இந்தத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களுக்கு இரும்பினாலான உலோக சட்டங்கள் 95 (Rack) கொள்வனவு செய்வதற்காக திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் 2024.05.13 ஆம் திகதி பி.ப.2.00 மணி வரை விலை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. விலைமனு ஆவணங்களை 2024.05.13 ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை மீளளிக்கப்படாத ரூ.5,000.00 தொகையை சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட ரசீதை கணக்காளரிடம் (வழங்கல் பிரிவு) சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக தகவல்களை வழங்கல் பிரிவின் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் 011-3070870 ஆகும். தேவை எனின் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை இந்த அலுவலகத்தில் பரீட்சிக்க முடியும்.
3. விலைமனு முன் சந்திப்பொன்று 2024.04.30 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் நடைபெறும்.
4. பூரணப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களை, விலைமனு ஆவணங்களின் நிபந்தனைகளுக்கு ரூபா. 199,500.00 பெறுமதியான விலைமனுக் காப்பீட்டுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இணைப்பிரதிகளில் தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, பதிவாளர் நாயகம் திணைக்களம், இல.234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடவோ முடியும். விலைமனுக்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இரும்பு உலோக சட்டங்களுக்கான விலைமனு கோரல் 2024/04" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
5. 2024.05.13 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். அந்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர் நாயகம்**
**திணைக்களக் கொள்முதல் குழுத் தலைவர்**

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**இல.234/A3,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

The Housewives' companion
Classifieds on
Daily News

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வடமேல் மாகாண சபை

## மாகாண கல்வித் திணைக்களம்

கல்வி அமைச்சினால் நிதியிடப்பட்ட பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள புதுப்பித்தல் வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மாகாணக் கல்விப் பணிப்பாளர் (வடமேல் மாகாணம்) சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| தொ. இ ல. | விலைக் கோரல் குறியீட்டிலக்கம் | ஒப்பந்தத் தலைப்பு | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் | நிதி வளம் | தேவையான CIDA பதிவுத் தரம் | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) (பண வைப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது) | விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 24/E/Ridee/ GEMP/NCB/ R1 | இப்பாகமுவ மெதமுல்லடி மெல் மகா வித்தியாலயத்தில் உள்ள ஆங்கில செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | ரீதிகம | GEMP | C8 அல்லது C7 மட்டும் | 105 | 22,000.00 | 2024-07-16 ஆம் திகதி வரை | 3,500.00 | 2024-08-13ஆம் திகதி வரை |
| 02 | 24/E/Putt/ GEMP/NCB/ R2 | புத்தளம் ரதம்பல மத்திய மகாவித்தியாலயத்தில் உள்ள ஆங்கில செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | புத்தளம் | GEMP | C8 அல்லது C7 மட்டும் | 105 | 36,000.00 | 2024-07-16 ஆம் திகதி வரை | 3,500.00 | 2024-08-13ஆம் திகதி வரை |
| 03 | 24/E/Ridee/ GEMP/NCB/ R3 | குருநாகல் மாவத்தகம தேசிய பாடசாலையில் உள்ள ஆங்கில செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | ரீதிகம | GEMP | C8 அல்லது C7 மட்டும் | 105 | 33,000.00 | 2024-07-16 ஆம் திகதி வரை | 3,500.00 | 2024-08-13ஆம் திகதி வரை |
| 04 | 24/E/Kuli/ GEMP/NCB/ R5 | குருநாகல் ஹோலி ஏஞ்சல்ஸ் மகளிர் மகா வித்தியாலயத்தில் உள்ள ஆங்கில செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | குளியா பிட்டிய | GEMP | C8 அல்லது C7 மட்டும் | 105 | 25,000.00 | 2024-07-16ஆம் திகதி வரை | 3,500.00 | 2024-08-13ஆம் திகதி வரை |
| 05 | 24/E/Maho/ GEMP/NCB/ R8 | மாகோ பொல்பித்திகம தேசிய பாடசாலையில் உள்ள ஆங்கில செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | மாகோ | GEMP | C8 அல்லது C7 மட்டும் | 105 | 35,000.00 | 2024-07-16 ஆம் திகதி வரை | 3,500.00 | 2024-08-13ஆம் திகதி வரை |
| 06 | 24/E/Wari/ GEMP/NCB/ R10 | நிக்கவரெட்டிய ஜயந்தி மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ள ஆங்கில செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | வாரியபொல | GEMP | C8 அல்லது C7 மட்டும் | 105 | 28,000.00 | 2024-07-16 ஆம் திகதி வரை | 3,500.00 | 2024-08-13ஆம் திகதி வரை |
| 07 | 24/E/Ridee/ GEMP/NCB/ R12 | குருநாகல் மாவத்தகம தேசிய பாடசாலையில் உள்ள கணித செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | ரீதிகம | GEMP | C8 அல்லது C7 மட்டும் | 105 | 38,000.00 | 2024-07-16 ஆம் திகதி வரை | 3,500.00 | 2024-08-13ஆம் திகதி வரை |
| 08 | 24/E/Ridee/ GEMP/NCB/ R14 | இப்பாகமுவ கும்புக்வெவ மகாவித்தியாலயத்தில் உள்ள கணித செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | ரீதிகம | GEMP | C8 அல்லது C7 மட்டும் | 105 | 27,000.00 | 2024-07-16 ஆம் திகதி வரை | 3,500.00 | 2024-08-13ஆம் திகதி வரை |
| 09 | 24/E/Wari/ GEMP/NCB/ R15 | நிக்கவெரட்டிய - தண்டுவெவ கனிஷ்ட வித்தியாலயத்தில் உள்ள கணித செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | வாரியபொல | GEMP | C8 அல்லது C7 மட்டும் | 105 | 26,000.00 | 2024-07-16 ஆம் திகதி வரை | 3,500.00 | 2024-08-13ஆம் திகதி வரை |
| 10 | 24/E/Kuli/ GEMP/NCB/ R17 | குளியாப்பிட்டிய - கித்தலாவ பூகல்ல வித்தியாலயத்தில் உள்ள கணித செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | குளியாப் பிட்டிய | GEMP | C9 அல்லது C8 மட்டும் | 60 | 4,200.00 | 2024-07-02 ஆம் திகதி வரை | 1,000.00 | 2024-07-30ஆம் திகதி வரை |
| 11 | 24/E/Putt/ GEMP/NCB/ R18 | புத்தளம் - பாலாவி சிங்கள மகா வித்தியாலயத்தில் உள்ள கணித செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | புத்தளம் | GEMP | C8 அல்லது C7 மட்டும் | 105 | 30,000.00 | 2024-07-16 ஆம் திகதி வரை | 3,500.00 | 2024-08-13ஆம் திகதி வரை |
| 12 | 24/E/Putt/ GEMP/NCB/ R19 | நிக்கவெரட்டிய - தண்டுவெவ கனிஷ்ட வித்தியாலயத்தில் உள்ள கணித செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | புத்தளம் | GEMP | C8 அல்லது C7 மட்டும் | 105 | 32,000.00 | 2024-07-16 ஆம் திகதி வரை | 3,500.00 | 2024-08-13ஆம் திகதி வரை |
| 13 | 24/E/Wen/ GEMP/NCB/ R20 | சிலாபம் - பங்கதெனிய மகாவித்தியாலயத்தில் உள்ள கணித செயற்பாட்டு அறையின் புதுப்பித்தல் வேலைகள் | வென்னப்புவ | GEMP | C8 அல்லது C7 மட்டும் | 105 | 39,000.00 | 2024-07-16 ஆம் திகதி வரை | 3,500.00 | 2024-08-13ஆம் திகதி வரை |

2. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்ட பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) தேவையான பதிவுத் தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தொழில்நுட்பத் தகவல்களை குருநாகல், மாகாண சபை அலுவலகக் கட்டிடத்தொகுதி, 2ஆம் மாடி, பொறியியல் திணைக்களம், மாகாண பொறியியல் பணிப்பாளர் (வமேமா) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி / தொலைநகல்: 037-2222700.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 மே 13ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் குருநாகல், கண்டி வீதி, மாகாண கல்வித் திணைக்களம், பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
5. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2024 மே 14ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது குருநாகல், கண்டி வீதி, மாகாண கல்வித் திணைக்களம் (வமேமா), பிரதான கணக்காளர் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள ''கேள்விப் பெட்டி''யில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் 2024 மே 14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்கூறிய முகவரியில் உடன் திறக்கப்படும்.
6. தேசிய போட்டி கேள்விகோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii)ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 8ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள மாகாண கல்வித் திணைக்களத்தில் 2024 மே 3ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**J.A.M.P. ஜயதிலக்க,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம் (வமேமா),**
**கண்டி வீதி, குருநாகல்.**

**தொலைபேசி: 037-2222422**
**தொலைநகல் இல. 037-2222422/037-2222545**
**இணையதள முகவரி: www.nwpedu.lk**
**திகதி: 2024-04-22.**

## காலி மரபுரிமை மன்றம்

### புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

### முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்

## காலி உலக மரபுரிமை தளத்திற்கு மரபுரிமை ஆதன உரிமையாளர்களின் கையேடு ஒன்றைத் தயாரித்தல்

**(Preparation of a Heritage Property Owners' Manual for the World Heritage Site of Galle)**

காலி உலக மரபுரிமை தளத்திற்கு மரபுரிமை ஆதன உரிமையாளர்களின் கையேடு ஒன்றைத் தயார் செய்வதற்கு ஆலோசகர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான முன்மொழிவுகளை காலி மரபுரிமை மன்றத்தின் பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

காலி கோட்டையிலுள்ள சொத்துக்களைப் பராமரித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல், சட்டவிதிகளுக்கு அமைவாக, காலி கோட்டையின் சிறந்த உலகலாவிய மதிப்பின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தவும் மரபுரிமை சொத்து உரிமையாளர்களுக்கு கையேடு ஒரு நடைமுறை வழிகாட்டியாக இருக்க வேண்டும். காலி கோட்டைக்கு இயைபான ஒழுங்கு விதிமுறைகள், அங்கு வசிப்பவர்கள் மற்றும் ஏனைய உரிமையாளர்களுக்கு சமகால வாழ்க்கைத் தரத்தை அனுமதிக்கும்.

01. கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பராமரிப்பு மற்றும் சேவைகளை நடத்திச் செல்வதற்கு பொருத்தமான ஒப்பந்தங்களை தேர்ந்தெடுப்பதற்காக 2024.05.14 மு.ப. 10.00 வரை கேள்விகள் கோரப்படுகின்றன.

    - PROCUREMENT OF NETWORK MAINTENANCE SERVICE FOR NATIONAL HOSPITAL KANDY FOR 03 YEARS

02. 2024 ஏப்ரல் 22 முதல் 2024 மே 13 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு ரூ. 5000.00/- மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளும் கேள்வி ஆவணங்கள் மூலம் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். கண்டி தேசிய வைத்தியசாலையில் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு கேள்வி திறக்கப்படும் வேளையில் சமுகமளிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

03. பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஒப்படைத்தல் பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம். அல்லது கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் சேவையின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுங்கள்

04. எவ்வாறெனினும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடையும் தினத்திற்கு மற்றும் நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். கேள்விப் பத்திரங்களை பரீட்சித்தல் அறவிடப்படாமலேயே கண்டி தேசிய வைத்தியசாலையில் மேற்கொள்ளலாம். தொ.பே. இலக்கம் (081-2233337 முதல் 42 வரை) நீடிப்பு 2216 மூலம் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

05. 05 மில்லியனுக்கு மேற்படும் கேள்விப் பத்திரங்களுக்கு இலங்கை கம்பனிகள் பதிவாளர் திணைக்கள பதிவுச் சான்றிதழில் (PCA3) இருத்தல் கட்டாயமாகும்.

06. கேள்விக்கு முன்னரான கலந்துரையாடல் (Pre bid meeting) 2024 மே 07 மு.ப. 10.00 இற்கு கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர், அறைக்கு அருகில் உள்ள கலந்துரையாடல் அறையில் நடைபெறும்.

07. திறந்த போட்டி கேள்வி முறையின் கீழ் கேள்விகள் கோரப்படும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**தேசிய வைத்தியசாலை,**
**கண்டி.**

# ஏலத்திற்கான அழைப்பு

### அம்பகமுவ பிரதேச சபை

### அம்பகமுவ பிரதேச சபையினால் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட வாகனங்களை ஏலமிடுவதற்கான விலைமனு கோரல்

- எங்கள் நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்டு பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட பின்வரும் துணை ஆவணங்கள் 01, 02 மற்றும் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் விற்பனைக்காக வாங்குபவர்களிடமிருந்து விலைகள் அழைக்கப்படுகின்றன.
- அதன்படி, நீங்கள் அந்த வாகனங்களை வாங்க விரும்பினால், அதற்கான ஏல விண்ணப்பப் படிவங்களை 22.04.2024 முதல் 07.05.2024 ஆம் திகதி வரை பொது விடுமுறை அல்லாத நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையிலான நேரத்திற்குள் அம்பகமுவ பிரதேச சபை அலுவலகத்திலிருந்து ஒரு விண்ணப்பத்திற்கு திரும்ப செலுத்த முடியாத ரூ. 2,000.00 கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.
- தற்போது இருக்கும் பின்வரும் வாகனங்களை பரிசோதிக்கப்பட்டு சீல் வைக்கப்பட்ட உங்களின் ஏல விண்ணப்பங்கள், தனித்தனியாக "தலைவர், கொள்முதல் குழு, அம்பகமுவ பிரதேச சபை, கினிகத்தேனை என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அல்லது கேள்வி பெட்டியில் வைப்பதன் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம். ஏல விண்ணப்பங்கள் வைக்கும் உறையின் மேல் இடது மூலையில் அம்பகமுவ பிரதேச சபை,"உடைந்த வாகன ஏலம் - துணை ஆவணங்கள் தொடர்புடைய துணை ஆவண எண் மற்றும் வாகன எண், குறிப்பிடுவது என்று கட்டாயமாகும்
- பூர்த்தி செய்யப்பட்ட ஏல விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்வது 08.05.2024 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவடைவதுடன் அதன் பிறகு முன்வைக்கும் ஏல விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
- ஏல விண்ணப்பப் படிவங்களை திறத்தல் 08.05.2024ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு தொடங்குவதுடன் அந்த சந்தர்ப்பத்தில் ஏலதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நபரொருவர் கட்டாயமாக கலந்து கொள்ள வேண்டும்.
- எம்மிடம் கிடைக்கப்பெற்ற முத்திரையிடப்பட்ட வாகனங்களின் மதிப்பீட்டு மதிப்பு தொடர்பான கடிதம் ஏல விண்ணப்பப் படிவங்களைத் திறக்கும் நேரத்தில் திறக்கப்படுவதுடன் அதன்படி அந்த மதிப்பீட்டுத் தொகை அல்லது அதற்கு மேற்பட்ட ஏலங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஏலங்களும் அந்தந்த மதிப்பீட்டு மதிப்பை விட குறைவாக இருந்தால், குறைந்தபட்ச ஏலமாக மதிப்பிடப்பட்ட தொகைக்கு அமைவாக அந்த நேரத்தில் வருகைத்தந்துள்ள ஏலதாரர்களிடமிருந்து ஏலங்கள் திறந்த ஏலத்திற்கு முன்வைக்கப்படும்.
- கேள்வியை ஏற்க அல்லது நிராகரிக்க கொள்முதல் குழுவிற்கு அதிகாரம் உள்ளது மற்றும் ஏலத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதி முடிவு சபைக்குரியதாகும்.
- துணை ஆவணங்கள் 01, 02 மற்றும் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் அல்லது விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த ஏல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால், உரிய தொகையும் %1 முத்திரைத் தொகையை அதே நாளில் சபையின் பொது நிதியில் வரவு வைக்கப்பட்டு சபை வளாகத்தில் இருந்து வாகனங்களை அகற்ற வேண்டிய நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை அம்பகமுவ பிரதேச சபைக்கு அலுவலக நேரத்தில் பின்வரும் இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தொ - இலக்கம் 051-2242224**
**19.04.2024 ஆம் திகதி**

**தலைவர்,**
**கொள்முதல் குழு,**
**அம்பகமுவ பிரதேச சபை.**

**உப அட்டவணை இல 01**

| வாகன இலக்கம் | வகை | பதிவு செய்யப்பட்ட வருடம் | ஏலப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 49-9109 | MASSEY FURGUSON - MF240 | 12/11/1997 | 2,000.00 |

**உப அட்டவணை இல 02**

| வாகன இலக்கம் | வகை | பதிவு செய்யப்பட்ட வருடம் | ஏலப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 49-9110 | MASSEY FURGUSON - MF240 | 12/11/1997 | 2,000.00 |

**உப அட்டவணை இல 03**

| வாகன இலக்கம் | வகை | பதிவு செய்யப்பட்ட வருடம் | ஏலப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 49-2000 | KUBOTA - B 7100DP Open | 5/14/1993 | 2,000.00 |

# விலைமனுக்களுக்கான வேண்டுகோள் (RFB) - வேலைகள்

### இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

### நீர்ப்பாசன அமைச்சு

### நீர்ப்பாசனத் திணைக்களம்

### காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை செயற்றிட்ட அடையாளம் - P 160005 / கடன் இலக்கம்: IBRD-89960

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

**விலைக்கோரல் இலக்கம்: CResMPA-1/RP/WORKS/ID-POL/NCB/008, 079, 127, 128, 130, 134, 135, 136, 139, 142, 143, 148, 153, 154, 155 & 156**

1. காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை (**CResMPA**) கிரயச் செலவிற்காக மீள் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து (IBRD) கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் பெற்றுள்ளது என்பதுடன் இந்தக் கடனின் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான தகுதியான கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தவுள்ளது. தகுதியுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.

2. அனுராதபுரம் மாவட்டத்தினுள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பொலன்னறுவை - நீர்ப்பாசனப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த பொதி இலக்கம் | வேலையின் பெயர் | முடிவுறுத்தும் காலம் (நாட்கள்) | ICTAD (ஆகக் குறைந்த தரம்) நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப் பின் கீழ் | விலைக்கோரல் பிணை முறி | | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) | வருடாந்த நிர்மாணப் புரள்வு (இல. ரூபா மில்லியன்) | நிதி வளம் (இல. ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை (இல. ரூபா) | காலம் (நாட்கள்) | | | |
| CResMPA-1/RP/ WORKS/ID-POL/ NCB/008 | ஹதரஸ் கொட்டுவயில் உள்ள ஹல்மில்ல வெவயில் கால்வாய் முறைமையின் மேம்படுத்தல்கள் | 6 | C 7 | 91,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 8.00 | 3.00 |
| CResMPA-1/RP/ WORKS/ID-POL/ NCB/079 | கிரிதலே திட்டத்தில் உள்ள RB2/7 இன் D 07 கால்வாயின் மேம்படுத்தல்கள் | 6 | C 7 | 168,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 15.00 | 5.00 |
| CResMPA-1/RP/ WORKS/ID-POL/ NCB/127 | மின்னேரிய திட்டத்தில் உள்ள குசும்பொக்குன DCO பிரதேசத்தில் D31/FC 17 கால்வாயின் 0+057 முதல் 0+289 வரையில் கால்வாய் லைனிங் நிர்மாணித்தல் | 6 | C 7 | 110,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 10.00 | 4.00 |
| CResMPA-1/RP/ WORKSID-POL/ NCB/128 | B503 சிரிகந்துயாய DCFO பிரதேசத்தில் stn. 3+400 முதல் stn. 3+510 வரை கால்வாய் லைனிங் நிர்மாணித்தல் | 6 | C 8 | 82,000.00 | 91 (2024-08-13ஆம் திகதி வரை) | 63 | 7.00 | 3.00 |
| CResMPA-1/RP/ WORKSID-POL/ NCB/130 | சிறிகந்துவெவ கிரிதலே திட்டத்தில் கட்டுவ கால்வாயில் இடதுகரை 09இல் D6 கால்வாயின் மேம்படுத்தல்கள் | 6 | C 6 | 189,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 16.00 | 6.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-POL/ NCB/134 | இஹலகளுவெவ பிரதான கால்வாயில் (510 இடதுகரை கால்வாய்) 2+770 இடத்தில் கட்டமைப்பு மூலமான மேம்படுத்தல்கள் | 6 | C 7 | 118,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 10.00 | 4.00 |
| CResMPA-1/RP/ ORKS/I D-POL/ NCB/135 | போவெவ திட்டத்திலுள்ள FC 4 கால்வாயின் மேம்படுத்தல்கள் | 6 | C 7 | 156,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 14.00 | 5.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-POL/ NCB/136 | மின்னேரிய பிரிவிலுள்ள கிரிதலே திட்டத்தில் D 12 கால்வாய் 0+475 முதல் 0+940 வரை மேம்படுத்தல்கள் | 6 | C 6 | 194,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 17.00 | 6.00 |
| CResMPA-1/RP/ WORKS/ID-POL/ NCB/139 | மின்னேரிய பிரிவிலுள்ள எகிரி ஓய திட்டத்தில் எகிரி ஓய அணைக்கட்டு மற்றும் நுழைவுப் பாதைகளின் மேம்படுத்தல்கள் | 6 | C 7 | 109,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 10.00 | 4.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-POL/ NCB/142 | விகார மாவத்தை DCO பிரதேசத்தில் 29+290 இடத்தில் D37/LBMC கால்வாய் Spill நிர்மாணித்தல். | 6 | C 6 | 199,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 17.00 | 6.00 |
| CResMPA-1/RP/ WORKS/ I D-POL/ NCB/143 | எலிகிபுலாவ DCFO பிரதேசத்தில் எலிகிபுலாவ (B 508) கால்வாயில் stn. 2+100 முதல் stn. 2+760 வரை மேம்படுத்தல்கள் | 6 | C 7 | 121,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 11.00 | 4.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-POL/ NCB/148 | பொலன்னறுவை பிரிவிலுள்ள D1 கிழக்குக் கால்வாயில் D1 கிழக்குக் கால்வாய் 8+100 இடத்தில் இடதுகரை பக்க அணையின் மேம்படுத்தல்கள் | 6 | C 8 | 60,000.00 | 91 (2024-08-13ஆம் திகதி வரை) | 63 | 5.00 | 2.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-POL/ NCB/153 | D17/ LBMC 0+000 முதல் 1+160 km வரையில் 160 மீற்றர் நீளமான தடுப்புச் சுவரை தகர்த்தல் மற்றும் மீள் நிர்மாணித்தல் | 6 | C 7 | 107,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 10.00 | 4.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-POL/ NCB/154 | புலஸ்திகம கமநல சேவை நிலையத்திலுள்ள வெட்டகடு அணைக்கட்டின் புனரமைப்பு | 6 | C 6 | 335,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 29.00 | 10.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-POL/ NCB/155 | செவனகம கமநல சேவை நிலையம் மீரன்வெளி அணைக்கட்டில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் மற்றும் அணைக்கட்டின் திருத்தவேலைகள் | 6 | C 6 | 208,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 18.00 | 6.00 |
| CResMPA-1/RP/ WORKS/ ID-POL/ NCB/156 | மெதிரிகிரிய கமநல சேவை நிலையம் சோலயாறு அணைக்கட்டில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் மற்றும் அணைக்கட்டின் திருத்தவேலைகள் | 6 | C 7 | 172,000.00 | 105 (2024-08-27ஆம் திகதி வரை) | 77 | 15.00 | 5.00 |

3. தகைமைத் தேவைப்பாடுகள்: விலைமனுதாரர் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளார் என ஆவண ரீதியாக விளங்கப்படுத்துதல் வேண்டும்.
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பில் விசேடத்துவமாக ஆகக் குறைந்த ICTAD/CIDA செல்லுபடியாகும் தரப் பதிவு
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கடந்த ஐந்து (05) வருடங்களினுள் ஆகக்குறைந்த சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தம்வசமுள்ள நிதி வளம் அல்லது கிடைக்கும் வழிகளை விலைமனுதாரர் விளங்கப்படுத்துதல் வேண்டும்.
   - பொதுவான அனுபவம் - கடந்த ஐந்து (05) வருடங்களினுள் ஒப்பந்தக்காரர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரர் பாத்திரத்தின் கீழான அனுபவம்
   - விசேடத்துவ அனுபவம் - கடந்த பத்து (10) வருடங்களில் வெற்றிகரமாகவும், கணிசமாக நிறைவுசெய்யப்பட்ட குறைந்தபட்சம் இதனையொத்த இயல்பைக் கொண்ட ஒப்பந்தத்தில் ஒப்பந்தக்காரர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக பங்குபற்றியிருத்தல்.
   - கடந்த பத்து (10) வருடங்களில் நீர்ப்பாசன கால்வாய்களின் மண் வேலைகள் மற்றும் நிர்மாணம் அல்லது கால்வாய் கட்டமைப்பு திருத்தவேலைகளில் முக்கிய செயற்பாட்டு அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

4. IPF கடன் வாங்குபவர்களுக்கான உலக வங்கியின் 2020 பெறுகை ஒழுங்குவிதிகளின் 04வது பதிப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளுக்கமைவாக பொருட்கள், வேலைகள், ஆலோசனை அல்லாத மற்றும் ஆலோசனை சேவைக்கான பெறுகையின் பிரகாரம் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைக்கோரல்கள் இடம்பெறும் என்பதுடன் பெறுகை வழிகாட்டியில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களுக்கு இது திறந்திருக்கும். மேலதிகமாக உலக வங்கியின் ஆர்வ முரண்பாட்டு கொள்கையின் 1.6 மற்றும் 1.7 பந்திகளை தயவு செய்து பார்க்கவும்.

5. விலைமனுதாரர்கள் 2024-04-22ஆம் திகதி முதல் 2024-05-13ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் (9.30 மற்றும் 14.30 மணித்தியாலத்திற்கிடையில்) ஒவ்வொரு தொகுதிக்கும் NCB/154 ஒப்பந்தப் பொதிக்காக 6,000.00 இலங்கை ரூபாவையும் NCB/130, 136, 142 & 155 ஒப்பந்தப் பொதிகளுக்காக 4,000.00 இலங்கை ரூபாவையும் ஏனைய அனைத்து பொதிகளுக்காகவும் 3.500.00 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் பொலன்னறுவை, புதிய நகரம், நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து (பொலன்னறுவை) ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை (இரு நகல்களில்) கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.

6. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் விரும்பினால் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் அவற்றை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக விபரங்களை நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து (பொலன்னறுவை) பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0272222215.

7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-04-30ஆம் திகதி 14.30 மணித்தியாலத்தில் பொலன்னறுவை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும். வளமுள்ள விலைமனுதாரர்கள் 2024-04-29ஆம் திகதி 9.30 மற்றும் 16.00 மணித்தியாலத்தில் பின்வரும் அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.

| ஒப்பந்த இல. (CResMPA-1/RP/WORKS/ID-POL/…….) | அதிகாரியின் பெயர் | திகதி மற்றும் நேரம் | தொடர்பிலக்கம் |
|---|---|---|---|
| NCB/154, 155 & 156 | திரு. K.G.S.C. பிரியவத்தன/ பொறி. M.H.M. அசாருதீன் | 2024-04-29 9.00 - 11.30 மணித்தியாலம் | 071-376 0071 / 077-4748371 |
| NCB/128, 134 & 143 | பொறி. S. ரொமேஷ் சங்கர் | 2024-04-30 9.00 - 10.30 மணித்தியாலம் | 077-719 9771 அல்லது 066-225 6602 |
| NCB/008, 079, 127,130,136, 139, 142 & 153 | பொறி. S.P. மலிந்த ஜயதிலக்க | 2024-04-29 12.15 - 16.30 மணித்தியாலம் | 071-820 1230 அல்லது 027-224 6270 |
| NCB/135 &148 | பொறி. A.M.A.I.B. அபேசிங்க | 2024-04-30 11.00 - 12.30 மணித்தியாலம் | 071-184 4626 அல்லது 027-222 2330 |

8. 2024-05-14ஆம் திகதி 14.30 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பொலன்னறுவை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

9. சகல பொதிகளுக்கும் அல்லது பட்டியலில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பொதிகளுக்காக விலைமனுதாரர்கள் சுதந்திரமாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். எவ்வாறாயினும் பல பொதிகளுக்காக தகுதியைப் பெறும் பட்சத்தில், மிகவும் சாதகமான பொருளாதார நன்மைகளைக் கவனத்திற்கொண்டு ஒரு விலைமனுதாரருக்கு வழங்கப்படும் பொதிகளின் எண்ணிக்கையை தொழில் வழங்குநர் தீர்மானிப்பார்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**புதிய நகரம், பொலன்னறுவை.**

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''(ஒப்பந்த இலக்கம்) என்பதற்கான விலைமனு'' என தயவு செய்து எழுதவும்.

சகல விலைமனுக்களுடனும் மேற்கூறிய 1ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்திற்கான விலைக்கோரல் பிணைமுறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம்,**
**புதிய நகரம்,**
**பொலன்னறுவை.**

திகதி: 2024-04-22.

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## பெறுகை அறிவித்தல்

### 10 மடிக்கணினிகளை கொள்வனவு செய்வதற்கு விலைமனுக் கோரல்

**ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு**

ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு 10 மடிக்கணினிகளை கொள்வனவு செய்வதற்கு விலைமனு கோரப்படுகிறது.

1. இந்த கொள்வனவு சார்ந்த விலைமனுக்களுக்கான அழைப்பு (Invitation for Bid) மற்றும் முழுமையான விபரம் ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

   Link – https://shorturl.at/bfCJS
2. விலைமனு விண்ணப்பப் படிவங்களை 2024.04.22 ஆம் திகதி தொடக்கம் 2024.05.20 ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு 2024.05.20 ஆம் திகதி பி.ப. 2.00க்கு விலைமனு ஆவணங்களை ஏற்பது நிறைவு செய்யப்படும்.
3. இது தொடர்பில் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

   தொலைபேசி இலக்கம் - 055 2222 150

**எச்.எம். ஜீவன்த ஹேரத்**
**செயலாளர்**
**ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு**
**தலைவர்**

**2024.04.18 ஆம் திகதி**
**ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு,**
**இலக்கம் 14/4, பீலிபொத்தகம வீதி, அராவ பதுளை.**

**2011ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தடுக்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்**

2024-03-22ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் SPL 05/2024 இலக்கத்தின் கீழ் 2011ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தடுக்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் 347/F2, 1ஆம் ஒழுங்கை, பெபிலியான மாவத்தை, நுகேகொட எனும் முகவரியில் அமைந்துள்ள 2266ஆம் இலக்க உரித்து உறுதியினால் சான்றுபடுத்தப்பட்ட 05 பேர்ச் காணிக்கு வழங்கப்பட்ட வலுவிழக்கச் செய்யும் கட்டளை 2024-03-22ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும் பொருட்டு அறிந்துகொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

## மீண்டும் கள்ளு தவறணை குத்தகை விற்பனை – 2024 / 2025

**வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவு**

2024.07.01ம் திகதி முதல் 2025.06.30 திகதி வரையுள்ள காலத்திற்கான குத்தகை விற்பனைக்கான கேள்வி பத்திரங்கள் 2024.05.28 திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 2024.04.19ம் திகதி இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்.

**பிரதேச செயலகம்**
**வென்னப்புவ.**

**எச்.எம்.என். ஹேரத்**
**பிரதேச செயலாளர்.**

Repeat Your Ad For Better Offers

## பெறுகை அறிவித்தல்

**மாவட்ட பொது வைத்தியசாலை - மாத்தளை**

### வார்ட் இல. 15 பழுது பார்ப்பதற்கான கேள்வி கோரல்

மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள இல 15 வார்டின் நோயாளர்கள் மற்றும் ஊழியர் குழாமிற்கான மலசலகூடத்துடன் குளியலறை பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் அதனை பழுதுபார்க்க வேண்டி உள்ளது எனவே அதற்காக இலங்கை நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவுசெய்துள்ள தகைமையுடைய அனுபவமுள்ள ஒப்பந்த நிறுவனங்களில் இருந்து 2024.05.10 மு.ப.10.30 வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த வேலை | ஒப்பந்தம் பெறுமதி (வெட் வரி மற்றும் ஏனைய வரி இன்றி) | CIDA வகைப் படுத்தல் கடன் அடிப்படையில் தகைமை | ஒப்பந்த கால எல்லை | கேள்விப் பிணை முறி | | கேள்வி செல்லுபடி கால எல்லை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெறுமதி | செல்லுபடி கால எல்லை | |
| MT/ 2024/ 03 Ward 15- Toilet | Repairing and Renovation of Toilet Block in Ward - 15 | ரூ. 6.7 மில்லியன் | C-7 மற்றும் C-6 | 120 நாட்கள் | ரூ. 70,000.00 | 105 நாட்கள் | 77 நாட்கள் |

02. கேள்வி ஆவணங்களை 2024.04.22 முதல் 2024.05.09 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.00 இற்கு இடையிலான காலத்திற்குள் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் அலுவலக கணக்கு இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு வேண்டுதல் கடிதத்துடன் தகைமைகளை உறுதிசெய்யும் ஆவணங்கள் மற்றும் மீளளிக்கப்படாத ரூ.2,000.00 கேள்விப் படிவக் கட்டணத்தை மாத்தளை மாவட்ட பொது வைத்தியாசலையின் கணக்குப் பிரிவின் காசாளரிடம் காசாக செலுத்திய பின்பு பெற்றுக்கொண்ட பொதுப்படிவத்தில் பற்றுச்சீட்டு 172 ஐயும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு முன்பு வைத்தியசாலைக்கு வருகைதந்து குறித்த உத்தியோகபூர்வ இல்லத்தை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் குறித்த ஒப்பந்த வேலை சம்பந்தமான சிக்கல்களை தெளிவுபடுத்துவதற்காக 2024.05.02 மு.ப. 11.00 இற்கு நடைபெறும் கேள்விக்கு முன்னரான கூட்டத்தில் கலந்துகொள்ளல் வேண்டும். கேள்விதாரர்களால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் திருத்தங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

04. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.05.10 மு.ப.10.30இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதற்கு அல்லது மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்வி உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வார்ட் இல. 15 மலசலகூடத்துடன் குளியலறையைப் பழுது பார்த்தல் MT/2024/03/Ward 15 - Toiler" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் அதாவது 2024.05.10 மு.ப.10.30 இற்கு வைத்தியசாலை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

06. கேள்வி ஆவணங்களை அலுவலக நேரங்களில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர்**
**பிரதேச பெறுகைக்குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை**
**மாத்தளை.**
2024.04.19

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**கமத்தொழில் அமைச்சு**
**செயற்றிட்ட பிரதிப்பணிப்பாளரின் அலுவலகம் -**
**வடமேல் மாகாணம்**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)**
**செயற்றிட்ட இல.: P163742**

### (தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்)

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து – உலக வங்கி – 125 மில். அஐடொ இற்கு நிகரான கடனொன்றை கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்ட ஆகுசெலவிற்காக பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

02. பின்வரும் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வமேமா கீழ்மட்ட செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவரின் சார்பாக வட மேல் மாகாண செயற்றிட்ட பிரதிப்பணிப்பாளர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | பொருட்களின் விளக்கம் | | மீளளிக்கப்படாத கட்டணம் (இ.ரூபாவில்) | விலைமனுப்பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | இ.ரூபாவில் பெறுமதி | செல்லுபடியாகும் திகதி – வரையும் |
| LK-MOA-408732-GO-RFB/ NWP | Procurement of 20 Nos. Sprinkler Irrigation Systems (1/4 Ac) and 50 Nos.of inline Drip Irrigation Systems with fertigation unit (1/4 Ac) for Chile cultivation programme in 2024 Yala season-NWP under CSIAP | | 7500.00 | | Up to 13th August 2024 |
| | Lot 01. 1/4 ac Sprinkler Irrigation systems | 20 Nos | | 40,000.00 | |
| | Lot 02. ¼ ac Drip Systems with fertigation unit (in line) for Chile cultivation programme | 50 Nos | | 100,000.00 | |

03. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.

04. மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்திற்கு எந்தவொரு அரச உரிமையுள்ள தொழில்முயற்சியும் (சபை, கூட்டுத்தாபனம், பணியகம் போன்றவை) விலைமனுவை சமர்ப்பிப்பதாயின், அவர்கள் அவர்களின் விலைமனுவுடன் உலக வங்கியிடமிருந்து 3.23 (b) என்ற ஷரத்தின் IPF கடன் பெறுபவர்களுக்கான பெறுகை ஒழுங்குவிதிகள் தொடர்பில் ஒப்பந்தத்தை CSIAP இன் கீழ் வழங்குவதற்கான தகுதியையுடையவர்களென ''ஆட்சேபனை இல்லை'' என்ற கடிதத்தையும் மற்றும் / அல்லது மேற்குறிப்பிட்டுள்ள ஷரத்தின் கீழ் தகுதியுடையவர்களென சான்று பகரும் ஆவணங்களையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். இல்லாவிடின், அவர்களின் விலைமனுவானது பதிலிறுக்கப்படாத விலைமனு என கருதப்பட்டு எந்தவொரு ஐயவினாவுமின்றி நிராகரிக்கப்படும்.

05. விலைமனுதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட ஒப்பந்தத்திற்கு மற்றும் / அல்லது அதே விலைமனுவில் ஒன்று அல்லது மேற்பட்ட தொகுதிகளுக்கு உரித்தான விலைமனுக்கோரல் ஆவணங்களில் கூறப்பட்டுள்ளவாறு விலைமனுவை சமர்ப்பிக்கலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்களின் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகவுத்திறன், நிதியியல் மற்றும் ஏனைய ஆற்றல் எல்லைகளுக்கமைவாகவே தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை குருநாகல், யக்கபிட்டிய வீடமைப்புத்துறை, மிஹிந்து மாவத்தை, 51 ஆம் இலக்கத்திலுள்ள வடமேல் மாகாண செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்ட செயற்றிட்ட பிரதிப்பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 037-2227950, தொலைநகல்: 037-2227950 மின்னஞ்சல் - dpdcslapnwp@gmail.com) **2024** ஏப்ரல் 13 ஆம் திகதியிலிருந்து 2024 மே 13 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

07. 2024 ஏப்ரல் 22 ஆம் திகதியிலிருந்து 2024 மே 13 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்திய பின்னர் (தொகைக்காக மேலேயுள்ள அட்டவணையை தயவு செய்து பார்வையிடவும்) மேலேயுள்ள பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளருக்கு தலைப்புக் கடிதத்தின் மூலப்பிரதியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், தகுதியுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தை கொள்வனவு செய்யலாம்.

08. மேலேயுள்ள குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 2024 மே 06 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

09. மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெறுமதி மற்றும் திகதிக்காக விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள விதிக்கப்பட்ட உருமாதிரியில் அமைந்தவாறான நிபந்தனையற்ற விலைமனு உத்தரவாதத்துடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்டவாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனு உத்தரவாதமில்லாத எந்தவொரு விலைமனுவும் பதிலிறுக்கப்படவில்லையென கருதப்பட்டு எந்தவொரு ஐயவினாவுமின்றி நிராகரிக்கப்படும்.

10. விலைமனுக்கோரல் ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அவரது முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.

11. விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியான தபாலுறைகளில் அடக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்படல் வேண்டும். அதன் பின்னர் அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் வேலையின் விளக்கம் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.

12. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2024 மே 13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது தலைவர், பெறுகைக் குழு, செயற்றிட்ட பிரதிப்பணிப்பாளரின் அலுவலகம் (வடமேல் மாகாணம்) காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், இல.51, மிஹிந்து மாவத்தை, யக்கபிட்டிய வீடமைப்புத்துறை, குருநாகல் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

13. 2024 மே 13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனுக்களை பெற்றுக் கொள்ளல் மூடப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள், அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும். அரசாங்க அறிவித்தலின் பிரகாரம் மேலே திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள விலைமனுக்களை மூடும் திகதியன்று அலுவலகம் மூடப்படின் விலைமனுக்களை மூடும் திகதியானது உடனடியாக அடுத்து வரும் வேலை நாளாக அமைவதுடன் விலைமனுக்கள் அதே நேரத்திலும் இடத்திலும் திறக்கப்படும்.

14. செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாகும். பெறுகைக் குழுவானது தனியொரு, எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் அதன் சுயவிருப்பத்தில் நிராகரிப்பதற்கான அதிகாரத்தை கொண்டுள்ளது.

**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர் (வடமேல் மாகாணம்),**
**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம்,**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**இல. 51, மிஹிந்து மாவத்தை,**
**யக்கபிட்டிய வீடமைப்புத்துறை,**
**குருநாகல்.**
**திகதி: 17.04.2024**

## பெறுகை அறிவித்தல்

**கொலென்ன பிரதேச சபை - சபரகமுவ மாகாணம்**

கீழ்க்காணும் வேலை விடயங்களுக்காக கொலென்ன பிரதேச சபையின் செயலாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரியினால் 2024.04.24 முதல் 2024.05.09 மு.ப. 10.00 வரை கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல. | வேலை விடயம் | பொது மதிப்பீட்டு வேலைப் பெறுமதி (ரூ.மி.) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூ.) | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி (ரூ.) | ஒப்பந்த பதிவுப் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | உக்காத கழிவுப் பொருட் களஞ்சிய நிலையத்தை நிர்மாணித்தல் | 9.1 | 4000.00 | 91000.00 | C8/C7 |

02. இக்கேள்வி கோரல் திறந்த போட்டி பெறுகை முறைமையின் கீழ் இடம் பெறுவதுடன் இக் கைத்தொழிலானது ரூ. மி. 50 இற்கு குறைவான படியால் அரச நிதி சுற்று நிருப இல. (2016/04/02) இன் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் குறித்த (CIDA) தரப்படுத்தல் முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு கட்டிட நிர்மாணத்திற்காக கேள்விதாரர் தேர்ந்தெடுத்தல் இடம் பெறும். அச் சுற்று நிருபத்திற்கு அமைவாக பின்னர் விநியோகிக்கப்படும் அரச நிதி சுற்று நிருபம் (2023/03, 2023/03) மற்றும் (2016/04) என்ற சுற்று நிருபங்களும் பெறுகை விடயங்களுடன் பொருந்தும்.

03. 2024.04.24 முதல் 2024.05.08 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மேற் குறிப்பிட்டவாறு கட்டணங்களைச் செலுத்தி கொலென்ன பிரதேச சபை அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. சகல கேள்விதாரர்களும் இக்கைத்தொழிலிற்காக மேற்படி கேள்விப் பிணை முறிப் பெறுமதிக்கு குறித்த கேள்விப் பிணை முறியாக அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப் பிணையொன்றை 2024.05.09 முதல் 2024.09.05 வரை செல்லுபடியாகுமாறு 'செயலாளர், பிரதேச சபை, கொலென்ன' பயனாளியாக பெயர் குறிப்பிட்டு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணை முறி முறிமூலம் அல்லது குறித்த கைத்தொழிலின் பெயரில் கேள்விப் பிணைத் தொகையாக பிரதேச சபையில் குறித்த தொகையைக் காசு வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இக்கைத்தொழில் பற்றிய விபரங்களை கொலென்ன பிரதேச சபைக்கு வருகை தந்து அல்லது தொ.பே. இல. 045 2260275 இடம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படும் ஒருவருக்கு வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.05.09 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கொலென்ன பிரதேச சபை அலுவலகத்தில் பொறியிடப்பட்ட பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் விலை மனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும் மேலும், கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட நகல் பிரதியை வேறு உறையில் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

07. 2024.05.09 மு.ப. 10.15 இற்கு கொலென்ன பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

08. கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது பகுதியாக ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை கொலென்ன பிரதேச சபை பெறுகைக் குழுவிற்கு உரியது.

09. சகல கேள்விகளும் 2024.08.08 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**செயலாளர், பெறுகைக்குழு,**
**கொலென்ன பிரதேச சபை,**
**கொலென்ன.**

2024.04.22ம் திகதி

The Housewives' companion Classifieds on Daily News

# டெல்லி வலை பந்துவீச்சாளராக இலங்கையின் கருக்க இணைவு




இந்திய பிரீமியர் லீக் தொடரில் டெல்லி கெபிடல்ஸ் அணியின் வலைப் பந்து வீச்சாளராக இலங்கையின் 18 வயது கருக்க சங்கேத் இணைந்துள்ளார்.

கருக்க அண்மையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணத்தில் இலங்கை அணிக்காக ஆடியதோடு அவரது பந்துவீச்சு பாணி அதிகம் அவதானத்தை பெற்றிருந்தது. லைசியம் சர்வதேச பாடசாலை மூலம் கிரிக்கெட்டுக்கு பிரவேசித்த அவர் அண்மைக் காலத்தில் தொடர்ச்சியாக இலங்கை 19 வயதுக்கு உட்பட்டு அணியில் இடம்பிடித்து வந்தார்.

சங்கேத் இதுவரை இலங்கை இளையோர் அணிக்காக 16 போட்டிகளில் ஆடி 22 விக்கெட்டுகளை வீழ்த்தி இருப்பதோடு 22.68 பந்துவீச்சு சராசரியை பெற்றுள்ளார். அவரது சிறந்த பந்துவிச்சு 18 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளாகும்.

# தம்புள்ளை அணிக்கு புதிய உரிமையாளர்



எதிர்வரும் லங்கா பிரீமியர் லீக் பருவத்தில் தம்புள்ளை அணியின் புதிய உரிமையாளராக பங்களாதேஷ் தொழிலதிபர்களான தமீம் ரஹ்மான் மற்றும் கோலம் ரகீம் தலைமையிலான இம்பீரியல் ஸ்போட்ஸ் குழுமம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் எல்.பி.எல். தொடரில் புதிய உரிமையாளரின் கீழ் தம்புள்ளை அணி தம்புள்ள தண்டர்ஸ் என்ற பெயரில் ஆடவுள்ளது.

இம்பீரியல் ஸ்போட்ஸ் குழுமம் ஐக்கிய இராச்சிய சந்தையினை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதோடு, இந்த நிறுவனத்தின் இணை ஸ்தாபகர்களில் ஒருவரான தமிம் ரஹ்மான் எல்.பி.எல். தொடரில் புதிய அணியொன்றின் உரிமையாளர்களாக மாறியதில் தாம் மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை தம்புள்ளை தண்டர்ஸ் அணி தமது வீரர்கள் குழாத்தில் இணையும் முக்கிய வீரர்கள் குறித்த அறிவிப்பினை விரைவில் வெளியிடும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான எல்.பி.எல். தொடரானது டி20 உலகக் கிண்ணத்தின் நிறைவினை அடுத்து ஜூலை மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கபடி போட்டியில் சோபர் வெற்றி



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை பிரதேச செயலக கபடி சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டு கழகம் வெற்றி பெற்று அம்பாறை மாவட்டப் போட்டிக்கு தெரிவானது.

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு உத்தியோகத்தர் ஐ. இம்றுபஸ்கான் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (19) அட்டாளைச்சேனை பிரதேச கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுகளில் ஓர் அங்கமான கபடி போட்டியின் இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை அல் நஜா விளையாட்டு கழகத்தினை சோபர் விளையாட்டு கழகம் தோற்கடித்தது.

# மடாடுகம பி அணி வெற்றி

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**



மடாடுகம எம்.எஸ்.கே. விளையாட்டுக் கழகத்தினால் எட்டு விளையாட்டுக் கழங்களை இணைத்து நடத்திய நட்புறவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மடாடுகம விளையாட்டுக் கழகத்தின் பி அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

உடநிந்திகம அல் இம்ரான் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் (20) நடைபெற்ற இறுதிப் போட்டியில் மடாடுகம பி அணி 8 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

சிறந்த துடுப்பாட்ட வீரராக மடாடுகம அணியின் முப்தி தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்து வீச்சாளராக அல் இம்ரான் அணியின் முஹாஜித் தெரிவானார்.

# இஸ்ரேலுக்கு பாரிய பாதுகாப்பு உதவிக்கு அமெரிக்கா ஒப்புதல்



இஸ்ரேல், உக்ரைன் மற்றும் தாய்வானுக்கு பாதுகாப்பு உதவிகளை வழங்கும் 95 பில்லியன் டொலர் திட்டம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தத் திட்டம் சட்டமாவதற்கு அடுத்த வாரம் செனட் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்படவிருப்பதோடு தொடர்ந்து ஜனாதிபதி ஜோ பைடனின் கையொப்பத்தை பெற வேண்டி உள்ளது.

இதில் ரஷ்யாவுடன் போரிட்டு வரும் உக்ரைனுக்கு 23 பில்லியன் டொலர் ஆயுதங்கள் உட்பட 61 பில்லியன் டொலர் உதவியும், 9 பில்லியன் டொலர் மனிதாபிமான தேவைகள் உட்பட இஸ்ரேலுக்கு 26 பில்லியன் டொலர் உதவியும், தாய்வான் உட்பட ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கு 8 பில்லியன் டொலர்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அமெரக்காவின் இந்த புதிய திட்டம் உலகெங்கும் பிரச்சினையை தீவிரப்படுத்தும் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மரியா சகரோவா எச்சரித்துள்ளார்.

இதில் அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளியான இஸ்ரேலுக்கு இராணுவ உதவியாக மொத்தம் 13 பில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான உதவி இஸ்ரேலின் அயர்ன் டோர்ம் வான் பாதுகாப்பு அமைப்பை பலப்படுத்த வழங்கப்படவுள்ளது.

# மேற்குக் கரையில் இஸ்ரேலிய தாக்குதல்: 14 பலஸ்தீனர் பலி

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் வடக்கில் உள்ள நூர் ஷம்ஸ் அகதி முகாமில் இஸ்ரேல் இராணுவம் சனிக்கிழமை மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் குறைந்தது 14 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செம்பிறை சங்கம் குறிப்பிட்டுள்ளது.



இந்த நடவடிக்கையின்போது 10 ஆயுததாரிகள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. இஸ்ரேலின் இந்த சுற்றிவளைப்பு கடந்த வியாழக்கிழமை (18) தொடக்கம் இடம்பெற்று வருகிறது.

இதன்போது வீதிகளில் உடல்கள் இருப்பதும், வானில் சுற்றித் திரியும் ஆளில்லா விமானங்கள் வீடுகளை தாக்குவதையும், பலஸ்தீன முகம்களுக்கு ஊடாக கவச வாகனங்கள் செல்வதையும் கண்டதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. 'இதுவரை எமது பணியாளர்கள் நூர் ஷம்ஸ் முகாமில் இருந்து 14 சடலங்களை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்' என்று பலஸ்தீன செம்பிறை சங்கம் கூறியது.

பலஸ்தீன போராளிகளை இலக்கு வைத்து இஸ்ரேல் தொடர்ச்சியாக சுற்றிவளைப்புகளை நடத்தியபோதும் பெரும்பாலான பொதுமக்கள் தொடர்ந்து கொல்லப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் குடியேறிகளினால் இதுவரை சுமார் 480 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# ஹமாஸ் தலைவருடன் எர்துவான் பல மணி நேரம் பேச்சுவார்த்தை



காசாவில் இஸ்ரேலின் போருக்கு மத்தியில் ஹமாஸ் தலைவர் இஸ்மையில் ஹனியேவுடன் ஸ்தன்பூலில் பல மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்திய துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான், பலஸ்தீனர்களுக்கு இடையிலான ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளார். 'இந்த செயற்பாட்டில் பலஸ்தீனர்கள் ஒற்றுமையுடன் செயற்படுவது முக்கியமானதாகும். வெற்றிக்கான பாதை மற்றும் இஸ்ரேலுக்கு வலுவான பதில் கொடுப்பது ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிலேயே தங்கியுள்ளது' என்று எர்துவான் குறிப்பிட்டார்.

காசா மீதான இஸ்ரேலின் படையெடுப்பை துருக்கி தொடர்ந்து கடுமையாக சாடி வருகிறது. இந்நிலையில் கடந்த 2011 தொடக்கம் துருக்கியில் ஹமாஸ் அலுவலகம் ஒன்றை நடத்தி வருவதோடு ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் அங்கு அடிக்கடி பயணித்து வருகிறார். 'தையிப் எர்துவானாகிய நான் மாத்திரமே இருந்தாலும் கூட, இறைவன் எனக்கு ஆயுளைத் தந்திருக்கும் வரையில் பலஸ்தீன போராட்டத்தை பாதுகாப்பதற்கும் ஒடுக்கப்பட்ட பலஸ்தீனர்களின் குரலாகவும் நான் தொடர்ந்து செயற்படுவேன்' என்று எர்துவான் முன்னதாக குறிப்பிட்டிருந்தார்.

## சர்வதேச செய்திகள்

# படையெடுப்பு திட்டத்திற்கு மத்தியில் ரபா நகர் மீதான இஸ்ரேலிய தாக்குதல் தீவிரம்

## வீடுகள் மீது அடுத்தடுத்து குண்டு மழை: பெரும்பாலும் சிறுவர்கள் பலி



காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா நகர் மீது படை நடவடிக்கைக்கு திட்டமிட்டிருக்கும் இஸ்ரேல் அந்த நகர் மீது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளதோடு காசாவின் ஏனைய பகுதிகளிலும் உக்கிர தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

தெற்கு நகரான ரபாவில் நேற்று அதிகாலையில் பல வீடுகளை இலக்கு வைத்து நடத்திய இஸ்ரேலின் வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களில் ஒன்பது சிறுவர்கள் உட்பட குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய போர் விமானங்கள் ரபாவில் உள்ள இரு வீடுகளை தாக்கியதில் ஐந்து சிறுவர்கள் மற்றும் இரண்டு பெண்கள் உட்பட எட்டு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக அங்கிருக்கும் வபா செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தவிர ரபாவின் கிழக்கு பகுதியின் ஜொர்ஜ் வீதியில் உள்ள வீடு ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய குண்டு வீச்சில் நான்கு சிறுவர்கள் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் பலர் கயமடைந்திருப்பதாக அந்த செய்தி குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக கடந்த சனிக்கிழமை இரவு மத்திய ரபாவில் உள்ள ஷபூரா முகாமில் உள்ள வீடு ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதல் ஒன்றில் மூவர் கொல்லப்பட்டனர்.

இதே காலப்பகுதியில் மத்திய காசாவில் உள்ள ஷபூரா முகாமில் இஸ்ரேலிய தாக்குதல் ஒன்றில் ஆடவர் ஒருவர், அவரது குழந்தை மற்றும் அவரது கர்ப்பிணி மனைவில் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த முகாமில் உள்ள வீடு ஒன்றின் மீது இடம்பெற்ற பிறிதொரு தாக்குதலில் பலரும் காயமடைந்திருப்பதாக வபா செய்தி நிறுவனம் கூறியது. காசாவில் இஸ்ரேலிய தரைப்படை இன்னும் நுழையாத ஒரே பகுதியாக இருக்கும் இடம்பெயர்ந்த மக்கள் நிரம்பி வழியும் தெற்கு காசாவின் ரபா மீது படை நடவடிக்கை ஒன்றை முன்னெடுப்பது தொடர்பில் இஸ்ரேல் தொடர்ந்து கூறி வருகிறது. இது தொடர்பில் கடந்த வியாழக்கிழமை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் அதிகாரிகள் இடையே உயர் மட்ட பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றதாக போர் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரபாவில் படையெடுப்புக்கு முன்னர் அங்கிருக்கும் 1.4 மில்லியன் பலஸ்தீனர்களையும் அப்புறப்படுத்தும் திட்டத்தை இஸ்ரேல் அமெரிக்காவிடம் பகிர்ந்திருப்பாக அமெரிக்காவை தளமாகக் கொண்ட கண்காணிப்பு அமைப்பு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

எகிப்து எல்லையை ஒட்டிய ரபாவை சூழவுள்ள பகுதிகளில் இஸ்ரேல் தமது படைகளை அதிகரித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிட்டுள்ளன. இந்நிலையிலேயே அந்தப் பகுதியில் இஸ்ரேலின் தாக்குதல்களும் தீவிரம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ரபா நகருக்கு மேலால் மிகத் தாழ்வாக இஸ்ரேலிய கண்காணிப்பு ட்ரோன்கள் பறப்பதை காண முடிவதாக அங்கிருக்கும் அல் ஜசீரா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

ரபா மீதான தாக்குதல் பேரழிவை ஏற்படுத்தும் என்று இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்கா உட்பட உலக நாடுகள் கவலை வெளியிட்டு வருகின்றன. எனினும், ஹமாஸ் படைப் பிரிவுகளை ஒழிப்பதற்கு ரபா மீதான படை நடவடிக்கை தீர்க்கமானதாக உள்ளது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொடர்ந்து கூறி வருகிறார்.

ரபா தவிர இஸ்ரேல் 198 ஆவது நாளாக நேற்றைய தினத்திலும் காசாவின் ஏனைய பகுதிகளில் தாக்குதல்களை நடத்தி இருந்தது.

இதேவேளை தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரில் உள்ள நாசர் மருத்துவ வளாகத்தில் 50 உடல்களுடன் பாரிய புதைகுழி ஒன்றை கண்டுபிடித்ததாக பலஸ்தீன அவசர சேவை பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

'எமது குழுவினர் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டிருப்பதோடு இங்கு கணிசமான எண்ணிக்கையில் இருப்பதால் உயிரிழந்தவர்களின் எச்சங்களை மீட்பதற்கு எதிர்வரும் நாட்களில் தொடர்ந்து செயற்படவுள்ளோம்' என்று அந்த அவசர சேவை கூறியது.

இஸ்ரேலிய துருப்புகள் கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதி இந்தப் பகுதியில் இருந்து வாபஸ் பெற்ற நிலையிலேயே இந்தப் பாரிய மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்கள் மற்றும் கடும் மோதல்களுக்கு இடையிலே அந்த நகர் பெரும் அழிவை சந்தித்துள்ளது.

காசாவில் தொடரும் இஸ்ரேலின் தாக்குதல்களில் அங்கு கொல்லப்பட்டோர் எண்ணிக்கை 34 ஆயிரத்தை தாண்டி இருப்பதோடு 77 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஏழு மாதங்களாக நீடித்து வரும் இந்த போர் தணிவதற்கான சமிக்ஞைகள் இல்லாத சூழலில் இஸ்ரேலில் நெதன்யாகு அரசுக்கு தொடர்ந்து அழுத்தங்கள் நீடித்து வருகிறது.

இஸ்ரேலின் புதிய தேர்தலை நடத்தக் கோரியும், காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை மீட்டு வரக் கோரியும் இஸ்ரேலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற புதிய சுற்று ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றனர்.

பலஸ்தீன போராளிகளின் பிடியில் தொடர்ந்தும் 133 பணயக்கைதிகள் இருக்கும் நிலையில் அவர்களை மீட்டு வருவது தொடர்பில் இஸ்ரேலிய அரசின் அணுகுமுறைக்கு இஸ்ரேலில் அதிருப்தி அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் 'தடை'யை நெருங்கும் டிக்டொக் செயலி




சீனாவைச் சேர்ந்த அதிக பிரபலமான டிக்டொக் செயலிக்கு தடை விதிப்பதற்கு அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கடந்த சனிக்கிழமை (20) இடம்பெற்ற வாக்கெடுப்பில் பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளது.

இதன்படி டிக்டொக் சீன தாய் நிறுவனமான பைடான்ஸை மாற்றிக்கொள்ளாவிட்டால் அமெரிக்க சந்தையில் தடைக்கு உள்ளாகும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

சீனா உளவு பார்ப்பதற்கு டிக்டொக் உதவுவதாக அமெரிக்கா மற்றும் மற்ற மேற்கத்திய அதிகாரிகள் கவலை வெளியிட்டு வருகின்றனர். இந்த செயலி அமெரிக்காவில் 170 மில்லியன் பயனர்களை கொண்டுள்ளது.

இந்தத் திட்டம் 170 மில்லியன் அமெரிக்கர்களின் கருத்துச் சுதந்திரத்தை முடக்குவதாகவும் 7 மில்லியன் வர்த்தகங்களை அழிப்பதாகவும் டிக்டொக் குறிப்பிட்டுள்ளது. இந்த செயலி அமெரிக்க பொருளாதாரத்துக்கு வருடத்திற்கு 24 பில்லியன் டொலர் பங்களிப்புச் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இந்தத் திட்டம் நாளை (23) செனட் சபையில் வாக்கெடுக்கு வரவுள்ளது. தொடர்ந்து ஜனாதிபதி ஜோ பைடன் கையெழுத்திட்டதும் டிக்டொக் தடை சட்டமாக வாய்ப்பு உள்ளது.

# இறுதிச் சடங்கிற்கு சென்ற படகு மூழ்கி 58 பேர் பலி

மத்திய ஆபிரிக்க குடியரசு தலைநகர் பங்குயியில் இறுதிச் சடங்கு ஒன்றில் பங்கேற்கச் சென்ற அளவுக்கு அதிகமானோரை ஏற்றிய படகு ஒன்று ஆற்றில் மூழ்கியதில் குறைந்தது 58 பேர் உயிரிழந்துள்ளனர்.



கடந்த வெள்ளிக்கிழமை ம்போக்கோ ஆற்றில் இந்தப் படகு மூழ்கும்போது அதில் 300 பேர் வரை இருந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விபத்து இடம்பெற்று 40 நிமிடங்களின் பின்னரே மீட்பு சேவையினர் சம்பவ இடத்தை அடைந்துள்ளனர்.

மக்கள் படகில் இருந்து பாய்ந்து அல்லது விழுந்த நிலையில் கரையை அடைய முயற்சிக்கும் காட்சிகள் சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளன.

'இந்த விபத்து பயங்கரமாக இருந்தது. எனக்குத் தெரிந்த குடும்பம் ஒன்றின் ஏழு உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர்' என்று சம்பவத்தை பார்த்த ஒருவர் பிரெஞ்சு மொழி ஒளிபரப்புச் சேவையான ஆர்.எப்.ஐ. இற்கு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் விபத்து இடம்பெற்ற மறுதினமான கடந்த சனிக்கிழமையும் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் சம்பவ இடத்தில் இருந்து வெளியேறிச் சென்ற பின்னரும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் காணாமல்போனவர்களை தொடர்ந்த தேடி வந்ததாக அங்கிருக்கும் ஏ.எப்.பி. ஊடகவியலாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 22ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.